Registered as a newspaper

விலை - ரூபா 8.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -32+II

நாதம் 16 திருவள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை - 01 14-04-2005 வியாழக்கிழமை ஓசை 055


அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-11481)

# சிறுவர்களைப் படையில் இணைத்தல் என்பது அரசியல் சார்ந்ததொரு குற்றச்சாட்டு!

## அமெ.மனித உரிமைகள் சட்டத்தரணி கரீன்பாக்கர் தெரிவிப்பு



(ஜெனீவா)

இலங்கையில் சிறுவர்கள் படையணியில் சேர்த்துக் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டானது முற்றிலும் அரசியல் நலன் சார்ந்ததாகவே உள்ளது என அமெரிக்க மனித உரிமைகள் சட்டத்தரணியும், சர்வதேச கல்வி அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் திட்டத்தின் சிரேஷ்ட ஆணையாளருமான கரீன் பாக்கர் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னாபிரிக்க போராட்ட வீரரும் நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் டெஸ்மன் டுட்டுவைச் சந்தித்து பேசியபோது...

## ஐ.நா.வில் இந். நிரந்தர உறுப்புரிமைபெற இனப்பிரச்சினையில் அதிக அக்கறை தேவை

### சிறிலங்கா இராஜதந்திரி வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை பெற வேண்டுமானால் இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வுதொடர்பில் இந்தியா அதிக அக்கறை செலுத்த வேண்டுமென சிறிலங்காவின்முக்கிய இராஜ தந்திரீ ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். கல்யானந்தகொடகே எனும் இராஜதந்திரியே இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அதிக மக்கள் தொகை, அணு ஆயுத பலம் என்பவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர அங்கத்துவத்தை பெற இந்தியா முயல்வது தவறானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் சமாதான நடவடிக்கைகளில் அக்கறையற்ற தன்மையினை இந்தியா கொண்டிருக்குமானால் அது தனது இலக்கினை அடைய முடி (02ஆம் பக்கம் பார்க்க)

### -தோப்பூரில் எறிகணை வீச்சு-

## சிறிலங்கா இராணுவத்தரப்பின் குற்றச்சாட்டு புலிகளால் நிராகரிப்பு

திருமலை தோப்பூர் சிறிலங்கா இராணுவ முகாம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் எறிகணை வீழ்ந்து வெடித்ததாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவித்த குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் முற்றாக மறுத்துள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்டினா றொக்கா கொழும்பு வருகை சமாதான நிலை குறித்து ஆராய்வார்

(கொழும்பு)

தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் கிறிஸ்டினா றொக்கா அடுத்தவாரம் சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள றொக்கா சமாதான முயற்சிகளின் நிலை குறித்து அரசாங்க தரப்பினருடன் கலந்துரையாடவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளில் இந்தியா தலையிட (02ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்; ஜே. வி. பி. யின் நிலைப்பாட்டில் மாற்றம்?

### சர்வதேச அழுத்தங்கள் காரணமாம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புஒன்றை உருவாக்குவது தொடர்பில் அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை அடுத்து ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளுடன் இணைந்து அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள பொதுக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புத்தெரிவிக்காமல் இருப்பதற்கு ஜே.வி.பி தரப்பு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பை உருவாக்கத் தவறினால் சர்வதேச நிதி உதவிகள் திரும்பிச் சென்றுவிடும் அபாயநிலை குறித்து ஜே.வி.பியினருக்கு சனாதிபதி சுட்டிக்காட்டியதாகவும் அவ்வாறு சர்வதேச நிதியுதவி திரும்பினால் அதற்கான முழுப் பொறுப்பினையும் ஜே.வி.பியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என சனாதிபதி எச்சரித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

சனாதிபதியின் இந்த எச்சரிக்கையினை அடுத்து ஜே.வி.பி தனது முடிவினை மாற்றி (02ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசு நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம்

### அமைச்சர் ரட்ணசிறி வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசு மிகவும் நிதானமாக நடந்து கொள்வது அவசியமென்று சிறிலங்காப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளும், அரசும் செய்து கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையை மாற்ற இயலாது. அவ்வாறான ஒரு முயற்சி மீண்டும் யுத்தத்திற்கே இட்டுச் செல்லும். (02ஆம் பக்கம் பார்க்க)

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மக்களிடம் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்கின்ற இராஜரட்ணம் குடும்பத்தினரால் கிளிநொச்சியில் 35 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு போர்ச்சூழல் காரணமாகவும், சமூக பொருளாதார ரீதியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டுத்திட்டமானது கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் வேதா குடியிருப்புத் திட்டம் என்ற பெயரிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் கையளிக்கப்பட்ட மேற்படி நிதி தமிழீழ நிர்வாக சேவையிடம் ஒப்படைக்கப்பட்டு நிர்வாகசேவை இந்த 35 வீடுகளையும் அமைத்து நேற்று வைபவரீதியாக உரியவர்களிடம் கையளித்துள்ளது.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் நடைபெற்ற வீடு கையளிப்பு நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்



பொன். தியாகம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

அடுத்து மங்கல விளக்கினை மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஏற்றி வைத்தார்.

அடுத்து வேதாகுடியிருப்புத்திட்ட பெயர்ப்பலகையினை தமிழர்புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி திரைநீக்கம் செய்து வைத்தார்.

கிளிநொச்சி வலயப்பொறுப்பாளர் சிறி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளை புனர்வாழ்வுக்கழகஉதவி நிறைவேற்றுப்பணிப்பாளர் ரீகன், பொன்தியாகம் ஆகியோர்நிகழ்த்தினர். சிறப்புரையினை சோ.தங்கன் நிகழ்த்தினார்.

அடுத்து 35 குடும்பங்களுக்கும் உரிய வீட்டுத் திறப்பும் தேசியத் தலைவர் அவர்களின் படமும் வழங்கப்பட்டன.

இதனை கே.பி.றெஜி நிர்வாக சேவை வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் பிரியன் ,கிளி.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி கிளி.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், கிளி நிர்வாக சேவை மகளிர் பொறுப்பாளர் ராதை , மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பக துணைப் பொறுப்பாளர் பரஞ்சோதி , பொன்நகர் கிராம சேவகர் திருமதி. சுப்பிரமணியம், மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் நளன் ஆகியோர் வழங்கினார்கள்.

அடுத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் சிலவற்றை கே.பி.றெஜி வழங்கினார்.

மேற்படி வீட்டுத்திட்டம் கையளிப்பு நிகழ்வில் போராளிகள், பொறுப்பாளர்கள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு)

# பொதுக்கட்டமைப்பு உருவாக இந்திய அரசு ஆதரவளிக்கும்

## அமைச்சர் பா. சிதம்பரம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இணைந்து ஏற்படுத்தவுள்ள பொதுக்கட்டமைப்பிற்கு இந்திய அரசாங்கம் ஆதரவு வழங்கும் எனத் தெரிவித்துள்ளது.

அண்மையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்த இந்திய மத்திய நிதி அமைச்சர் பா.சிதம்பரம் இந்த உறுதி மொழியினை வழங்கியுள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாணப் பணிகளுக்கு பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்திய அர சாங்கமும் தனது ஆதரவை இதற்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# கலை நுணுக்க தொழில்நுட்ப கற்கை நெறி நிறைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கொழும்பு துறைமுகத்தாக்குதலின் போது வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் ரதன் அவர்களின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வும், ரதன் கலைநுணுக்க தொழில்நுட்ப கற்கைநெறி ஒன்று நிறைவு நிகழ்வும் நேற்று முன்தினம் பிற்பகல் 6.00 மணிக்கு கிளிநொச்சி தூயவன் அரசறிவியற்கல்லூரியில் நடைபெற்றது.



பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் ஈகச்சுடரேற்றல், மலரஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் "சங்கநாதம்" குழுவின் மாவீரர்நடனம் இடம் பெற்றது.

தொடர்ந்து நினைவுரையினை கடற்புலிகளின் தளபதிகளின் ஒருவரான கண்ணதாசனும், சிறப்புரையினை தமிழீழ திரைப்பட வெளியீட்டுப்பிரிவு பொறுப்பாளர் ராதாவும் நிகழ்த்தினர்.

அடுத்து கலை நுணுக்க தொழில் நுட்ப கற்கை நெறிப் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும்,கற்பித்த ஆசிரியர்களுக்கான பரிசில்களையும் கேணல் ஆதவன், கேணல் ரமேஸ், குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத்தளபதி கோபால், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

அதனைத் தொடர்ந்து ரதன் கலை நுணுக்க தொழில் நுட்ப கற்கை நெறி ஒன்று பயிலுனர்களின் கன்னி முயற்சியால் தமிழாக்கம்செய்யப்பட்ட பூனைகளும் நாய்களும் படம் திரையிடப்பெற்றது. (சோ)

# பொதுமக்கள் நலன்களைப் பாதிக்கும் வகையில் சட்டங்களை அமுல்படுத்துவதில் அரசு தீவிரம்!

## -பொதுமக்கள் பாதுகாப்பு அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் பொதுமக்கள் நலன்களைப்பாதிக்கும்சட்டங்களை அமுல்படுத்துவதில் தீவிரம் காட்டி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு குறிப்பிட்ட சட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்காமல் அவற்றை அமுல்படுத்துவது மனித உரிமைகளை மீறும் செயல் என பொதுமக்கள்பாதுகாப்பு அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் அரசாங்கத்தால் இவ்வாறான பல சட்டங்கள் அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனால் இவை குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் இதனால் பொதுமக்கள் இந்தச் சட்டங்களை மீறும் நிலை ஏற்பட்டு வருவதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

# சிறிலங்கா பொலிஸ் அதிகாரிகள் பதினேழு பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பதினேழுசிறிலங்கா பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முதல் இவ் இடமாற்றம் அமுலுக்கு வருவதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.இவர்களில் ஐந்து பொலிஸ் அதிகாரிகள் ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னரும், ஏனையோர் தரப்படுத்தலுக்கு அமையவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சிறந்த சேவை ஒன்றை வழங்கும் நோக்குடனேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸ்மா அதிபர் கூறினார்.

# புலிகளிடம் விமானப் படைத்தளம் இல்லை சனாதிபதி உலகை ஏமாற்றுகிறார்

## - முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் விமானப் படைத்தளம் உள்ளதாகக் கூறி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உலகை ஏமாற்ற முயற்சிக்கின்றாரோ என்ற சந்தேகம் தோன்றியுள்ளதாக சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப்புலிகள் இரணைமடுவில் விமான ஓடுதளம் ஒன்றை அமைத்திருப்பதாக வெளியான கருத்து தவறானது என திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

தான் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலப்பகுதியில் விமானப்படைத் தளபதி டொனால் பெரேராவுடன் தொடர்பு கொண்டு விடுதலைப்புலிகளிடம் விமானப் படைப்பிரிவு இருப்பதற்கான வாய்ப்புக் குறித்து ஆராய்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

2003ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆளில்லாத உளவு விமானங்களின் உதவியுடன் வன்னிப் பகுதியில் இது தொடர்பில் தேடுதல் நடத்தப்பட்ட போதிலும் விமான ஓடுதளம் ஒன்று இருப்பதற்கான தடயங்கள் பெறப்படவில்லை என்று கூறியுள்ளார்.

சனாதிபதி பாதுகாப்பு அமைச்சை 2003ம் ஆண்டு இறுதியில் பொறுப்பேற்ற பின்னரே இந்த ஓடுதளம் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் தாக்கியளிக்கப்பட்ட புலிகளின் விமான ஓடுபாதை தொடர்பில் தாக்குதலுக்கு முன்னர் பெறப்பட்ட உளவு விமானப் புகைப்படங்களை கொண்டுசனாதிபதி உலகை ஏமாற்ற முயற்சிக்கின்றாரோ? என்ற சந்தேகம் தோன்றியுள்ளதாகவும் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். (32)

# நாளை கைவிசேடம்

பார்தீப புதுவருடம் பிறப்பினை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கியின் சகல கிளைகளிலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை சுபநேர கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்நேரத்தில் வழமை தாரர்களுக்கு கைவிசேடமும் வழங்கப்படும் என பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# கட்டடத் திறப்புவிழா

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள (OBTEC) ஒப்ரிக் கணினி மொழியில் நிறுவனத்தினது 2ஆவது புதிய கட்டடத் திறப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி வைபவத்தில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் ஒப்ரிக் நிறுவன இயக்குனர் அருட்திரு பா.ஜெயபாலன் வேண்டியுள்ளார். (சோ)

## சிறுவர்களை....

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 61ஆவது செயலமர்வில் கருத்து வெளியிடும்போதே அமெரிக்கா சான்பிரன்சிஸ்கோவை தளமாகக் கொண்ட சட்டத்தரணியான அவர் இவ்வாறு கூறினார்.யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன் குறித்து உரிய அக்கறையற்றநிலை காணப்படும் அதேவேளை யுத்தத்திற்கென் சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதாக வெளியாகும் குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கம் கருதி மிகைப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவில் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் சிறுவர்களைப்படையில் சேர்ப்பது பற்றி விமர்சனங்கள் எழும் அதேவேளை அரசபடையில் 18 வயதுக்கு உட்பட்டோரை இணைப்பதைப் பற்றி எதுவும் கூறுவதில்லை. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 1998 இல் பாராளுமன்றத்தில் பேசும் போது 15 வயதுப் பாடசாலைப் பிள்ளைகளை படையில் சேர்ப்பதற்கு படையினர் பிரச்சாரங்களில் ஈடுபட்டதாகக் கூறியிருந்தார்.

அதேவேளை யுத்தத்தால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களால் அவர்களது வீடுகளிலும் பாடசாலைகளிலும் விளையாட்டு மைதானங்களிலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பெற்றோரையும் ஏனைய குடும்ப உறுப்பினர்களையும் இழந்திருக்கிறார்கள். வீடுகளை இழந்துள்ளார்கள்: இடம்பெயர்ந்திருக்கிறார்கள் இப்பொழுது சமாதான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகையில் இவர்களுக்கு ஆணைக்குழு உதவமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (32)

## போர்...

எனவே அரசு மிகவும் நிதானமாக நடந்துகொள்வது அவசியமாகும் என்று ஹொரணையில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு நிதானமாகவும், மதிநுட்பத்துடனும் செயற்பட்டு வருகின்றதெனவும் மேலும் கூறினார்.

## சிறிலங்கா....

சிறிலங்கா படைத்தரப்பு கூறுவது போன்று அவ்வாறான சம்பவம் எதுவும் நிகழவில்லை என விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன் நேற்று தெரிவித்தார்.

மூதூர் கிழக்கில் விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் வழமையான பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதனால் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் எவ்வித அசம்பாவிதமும் நிகழவில்லை என்பதனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் தெரியப்படுத்தியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (25)

## கிறிஸ்டினா...

வேண்டும் எனற கோரிக்கை வலுப்பெற்று வரும் நிலையில் அமெரிக்காவின் விசேட பிரதி நிதி இலங்கைக்குவிஜயம் மேற்கொள்ளவுளளமை பல கேள்விகளைஎழுப்பியுள்ளது. (32)

## அரசு...

யுள்ளதாகவும் சனாதிபதி நாடு திரும்பியவுடன் பொதுக்கட்மைப்பை உருவாக்குவது தொடர்பான இறுதி முடிவுகளை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யும் நோர்வேயின் சிறப்பு சமாதான தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் பொதுக்கட்டமைப்பு தொடர்பில் சாதகமான முடிவொன்றுடன் நாடு திரும்புவார் என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## ஐ.நா....

யாத நிலை ஏற்படும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு மிக அண்மைய அயல் நாடான இலங்கையில் மிக நீண்ட காலமாக தீர்வு காணப்படாமல் தொடரும் இனமுரண்பாட்டிற்கு தனது ஆளுமையைப் பயன்படுத்தி தீர்வினைச் காண முயலாத அல்லது முடியாத இந்தியாவிற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர அங்கத்துவத்தை பெறும் தகுதி கிடையாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிடாத போக்கினை தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானால் அமெரிக்கா அல்லது அதன் சார்பான நாடு ஒன்று பிராந்தியத்தில் நிலை கொள்வதற்கான வாய்பினை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, தனது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆர்ஜன்டீனாவில் கைதிகளுக்கிடையில் மோதல்


## 13 பேர் பலி; இருவர் உயிருடன் தீமூட்டிஎரிப்பு

(புவனஸ்அயர்ஸ்)

**ஆர்ஜன்டீனாவின் சிறைச்சாலை ஒன்றில் கைதிகளுக்கிடையில் நடைபெற்ற மோதலில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர் பலர் படுகாயமடைந்துள்ளனர்.**

கொலை, பாலியல் வல்லுறவு கடத்தல், போதைப் பொருள் விற்பனை போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இவர்கள் என்றும். இந்தக்கைதிகளில் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே திடீரென்று மோதல் ஏற்பட்டது. கைதிகள் ஒருவருக்கொருவர் கத்தியால் குத்திக்கொண்டதுடன், சிறைக்கு தீவைத்தனர்அத்தோடு சிறையின் காவலாளிகள் இரண்டு பேரைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டனர்.

இந்தகலவரத்தில் 13 கைதிகள் கொல்லப்பட்டனர்.இவர்களில் இரண்டு பேர் உயிரோடு தீவைத்து எரித்துகொல்லப்பட்டனர்.மீதி உள்ளவர்கள் தடியால் அடித்தும், கத்தியால் குத்தியும் கொல்லப்பட்டனர் 50 இற்கும் மேற்பட்டகைதிகள் காயமடைந்தனர்.



சீனாவின் கிழக்குக் கடலில் ஜப்பான் தனது பொருளாதாரவலயமாகக் பிரகடனப்படுத்தியுள்ள பகுதிக்கு அருகிலுள்ள சீனாவின் வாயு உற்பத்தி நிலையம் அண்மையில் சீனாவில் ஜப்பானின்பொருளாதார விஸ்தரிப்புக்கு எதிராகப் போராட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## மண்டேலாவின் வக்கீல் மீது இந்நாள் வக்கீல் வழக்கு

தென்ஆபிரிக்கா முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் முன்னாள் வக்கீலுக்கு எதிராக இப்போது நெல்சன் மண்டேலாவின் வக்கீல் ஜார்ஜ் பைசன் வழக்குத் தொடர்ந்துள்ளார். மண்டேலா அறக் கட்டளைக்கு நிதி திரட்டுவதற்காக மண்டேலாவின் பெயரை பயன்படுத்தியும், அறக் கட்டளையின் அரிய கலை பொக்கிசங்களையும், ஓவியங்களையும் விற்பனை செய்து ரூ.10 கோடிவரை அந்த முன்னாள் வக்கீல் நிதி திரட்டியதாகவும், இதில் ஊழல் நடந்துள்ளதாகவும் வக்கீல் பைசன் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்.




ராக்கில் பாக்தாக் விமான நிலைய வீதியில் குண்டுத்தாக்குதலை அடுத்து நெடுஞ்சாலையில் இடிபாட்டுகுப்பைகளைக் கூட்டும் அமெரிக்கப்படையினர்.

## சூரியசக்தியில் இயங்கும் விண்கலம் அமெரிக்கா ஏவியது

'சான்ஸ்ஸ்வர் ஒன்' என்ற விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி இருக்கிறது. அமெரிக்கா. 245 அடி நீளம் கொண்ட இந்த விண்கலம் செயற்கை கோள் போன்றும் செயற்படும். மொபைல் தொலைபேசி மற்றும் இதர தகவல் தொடர்பு வசதிக்காக பறக்கவிடப்படும். இந்த விண்கலம் சூரியசக்தியைக் கொண்டு இயங்குகிறது. இந்த விண்கலத்தில் புறப்புளரைப் பொருத்தும் வேலை நடக்கிறது. 65 ஆயிரம் அடி உயரத்தில் இந்த விண்கலம் நிலை நிறுத்தப்பட்டு அங்கிருந்து சமிச்சைகளை அனுப்பும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நடுவானில் விமானக் கதவு திறந்தது

## நியூசிலாந்து பிரதமர் மயிரிழையில் தப்பினார்

(வெலிங்டன்)

நியூசிலாந்து நாட்டு பிரதமர் ஹெலன்கிளார்க் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.இவர் வெலிங்டன் நகரில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெலிங்டன் நகருக்கு தனிவிமானத்தில் திரும்பிக் கொண்டிருந்தார்.


அப்போது திடீரென்று புயற்காற்று வீசியது. பலத்த மழையும் பெய்தது. புயற்காற்றின் வேகத்தால் விமானத்தை கட்டுக்கள் கொண்டு வர முடியவில்லை.

அந்த ஆறு இருக்கை விமானம் தாறுமாறாகப் பறந்தது. இந்த நிலையில் விமானத்தின் கதவும் திடீரென்று திறந்து கொண்டது. காற்று விமானத்துக்குள் புகுந்ததால் விமானம் தடுமாறியது.

விமானி மிகவும் கஷ்ரப்பட்டு விமானத்தை ஒருவழியாக அவசரமாக தரையிறக்கினார். விமானத்தின் முன்பகுதி தரையில் மோதிய படி அந்த விமானம் நின்றதாம். பிரதமர் ஹெலன் கிளார்க் உட்பட விமானத்தில் இருந்தவர்கள் அதிசயமாக உயிர்தப்பிவிட்டனர்.

உயிர் தப்பியது பற்றி பிரதமர் ஹெலன் கிளார்க் கூறும்போது; 'பாதுகாப்பு பட்டி அணியாமல் இருந்திருந்தால் நான் கீழே விழுந்து உயிர் இழந்திருப்பேன்' அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினேன்.

நான் உயிர்தப்புவேன் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை, என்று தெரிவித்தார்.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவத்தொடரணி மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஒருவர் உறவினரோடு உரையாடுகின்றார்.

## மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் போராட்டம் முடிவுக்கு வந்தது

(காத்மண்டு)

நேபாள மன்னர் ஞானேந்திராவுக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய 11 நாள் போராட்டம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

"கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நேபாளத்தில் ஆட்சியைக் கலைத்தார் மன்னர் ஞானேந்திரா, இதனையடுத்து நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. கடந்த 96ஆம்ஆண்டு முதல் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வன்முறையில் ஈடபட்டு வருகின்றனர். இதுவரை 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டஅப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களை ஒடுக்க இது போன்ற நடவடிக்கை தேவை" என்று மன்னர் ஞானேந்திரா கூறினார்.

மன்னர் ஆட்சியைஒழித்துவிட்டு கம்யூனிசஆட்சியைக் கொண்டு வர வேண்டுமென்று மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வன்முறையில் ஈடுபடுகின்றனர்.மன்னரின் செயலைக்கண்டித்து பதினொரு நாள் போராட்டத்தையும் தொடங்கினர். அந்தப்போராட்டம் நேற்று முன் தினத்துடன் முடிந்தது.

இதேவேளை கடைசி நாளில் நிர்வாக அதிகாரி ஒருவரை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

## அமெரிக்க விமானங்கள் குண்டு வீச்சு; ஆப்கானிஸ்தானில் 12 தீவிரவாதிகள் பலி

(காபூல்)


ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவை ஆதரிக்கும் முன்னாள் ராணுவத் தளபதி கியால் பாஸைக் கொல்ல முயன்ற 12 தீவிரவாதிகள், அமெரிக்கப் போர்விமானங்களின் குண்டு வீச்சில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திங்கட்கிழமை கியால் பாஸ் சென்றுகொண்டிருந்த கார் மீது இலக்குவைத்து தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தினர். ஆனால், அக்குண்டுகள் காரின் மீது படாமல் சற்றுத்தூரத்தில் விழுந்தன.

இதைத் தொடர்ந்து, அந்த இடத்துக்கு ஆப்கானிஸ்தான் படைகளும் அமெரிக்கப் போர் விமானங்களும் விரைந்தன. அப்பகுதியில் மறைந்திருந்த தீவிரவாதிகள் மீது கடுமையான தாக்குதல் நடைபெற்றதாகவும் இதில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தீவிரவாதிகள் கார்க்குண்டுத் தாக்குதல்; ஈராக்கில் பத்துப் பேர் பலி

ஈராக்கில் சதாம் ஹுஸைன் ஆதரவுத் தீவிரவாதிகள் தொடர்ந்து அமெரிக்க இராணுவத்தினருக்கு எதிராகவும், ஈராக் பொலிசாருக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். மோசல் நகரிலும் அதை அடுத்துள்ள தல்அபார் நகரிலும் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தியதில் பொதுமக்கள் பத்துப்பேர் பலியானார்கள். மோசல் நகரில் நடந்த கார்க் குண்டு வெடிப்பில் ஐந்து பேரும், தல்அபார் நகரில்நடந்த தாக்குதலில்ஐந்து பேரும்பலியானார்கள்.ஏழுகுழந்தைகள் உட்பட20 இற்கும்மேற்பட்டவர்கள் இதில்காயமடைந்தனர்.



கொங்கொங்கில் ஜப்பான் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின் ஜப்பான் காரியாலயத்தின் நுழைவாயிலில்

ஆர்ப்பாட்டக் காரர்களால் வீசி விட்டுச் செல்லப்பட்ட பிரதமர் யுனிசிறோ கொசூமியின் உருவப்படம்

-பேச்சுக்கு வாருங்கள் என்று கூறிய சர்வதேசம்

# அடக்குமுறை தொடரும் இன்றைய நிலையில் தமிழர்களை என்ன செய்யச் சொல்கிறது?

-கேள்வி எழுப்புகிறார் பா. உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

**சர்வதேச சமூகமே! போர் நடந்து கொண்டிருக்கின்றபோது எமது மக்கள், போராளிகள் கொல்லப்பட்டார்கள். தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் இவர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.எம்மீது இன்றும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. சமாதானத்தின் மூலம் பேச்சு வார்த்தைக்கு வாருங்கள் என்று சொன்ன நீங்கள் இன்று என்ன சொல்லப்போகின்றீர்கள்?**

என்று சர்வதேச சமூகத்திடம் கேள்வி எழுப்புகிறார் தமிழ்க் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்குமாறு கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

நாங்கள் இப்ப என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் சொல்லுங்கள் சண்டையை ஆரம்பிக்கச் சொல்லப்போகின்றீர்களா? நாம் அதற்கும் தயார் என்று கூறிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமாதானத்தின் ஊடாக ஒரு தீர்வு கிடைக்க வேண்டுமென நீங்கள் கருதினால் தென்னிலங்கை அரசாங்கத்திற்கும் சந்திரிகா அம்மையாருக்கும் நீங்கள் அழுத்தத்தைக் கொடுங்கள், பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற் கான திகதியை தீர்மானியுங்கள். இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சு வார்த்தையை ஆரம்பியுங்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஒரு குழுவை நியமியுங்கள். தமிழன் இன்றைக்கும் உணர்வோடு இருக்கிறான் என்றைக்கும் உணர்வோடு தான் இருப்பான் என்பதையும் தென்னிலங்கையில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகளுக்கும் எம்மை இழிவாகப் பேசும் பத்திரிகைகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் வால் பிடித்துக் கொண்டிருக்கும் தமிழ்க்கட்சிகளுக்கும் உணர்த்தி இவர்களின் முகத்தில் கரிபூசி இருக்கிறது இப்பேரணி என மேலும் தெரிவித்துள்ளார். (10)

## அதிபர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

இலங்கையிலுள்ள சகல அரசாங்கப் பாடசாலைகளினது அதிபர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா. மேலதிக கொடுப்பனவை வழங்க கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை சங்கத்தினரின் வேண்டுகோளுக் கிணங்கவே கல்வி அமைச்சு இவ்வாறு உத்தேசித்துள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

## அழிந்த வீடுகள் மீள்கட்டுமானம் உலக வங்கி ஒப்புதல்

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 27 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளது. அத்துடன்

இவர்களின் 23 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிந்த நிலையில் உள்ளன. இந்நிலையில் இவ்வீடுகளை மீள்கட்டுமானம் செய்யவும் உலக வங்கி 16 ஆயிரம் வீடுகளை புனரமைப்பதற்கும் ஒப்புக் கொண்டது என கிளி நொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

முதலில் ஒரு வீட்டுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் என ஏழாயிரம் வீடுகள் அமைப்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. மீண்டும் வீடமைப்பு நிதி கூட்டப்பட்டுள்ளது. ஒரு வீட்டுக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் என்ற வகையில் 350 தொடக்கம் 400 வரையான வீடுகளை அமைப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு மாவட்டத்தில் தற்போது இந்த வருடத்தில் 500 வீடுகள் அமைப்பதற்கான நிதி கிடைத்துள்ளது என கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். விரைவாக ஒதுக்கப்பட்ட 500 வீடுகளும் கட்டி முடித்தவுடன் மீண்டும வீடுகள் கட்டித் தருவதற்கு உலக வங்கி ஒப்புக்கொண் டுள்ளது.அரசாங்கத்தின் நிதி கிடைக்காத காரணத்தால் உலக வங்கியின் நிதியில் இவ்வீடுகள் கட்டப்பட இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

## திருமலையில் கடற்கோளினால் பாதிக்கபபட்ட மீனவ குடும்பங்களிற்கு படகுகள் கையளிப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பள்ளத்தோட்டம், நிலாவெளி, செல்வநாயகபுரம், சாம்பல்தீவு ஆகிய கிராமங்களில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மீனவக்குடும்பங்களுக்கு 45 மீன்பிடிப்படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களை வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக நேற்று முன்தினம் காலை ஆறு மீன்பிடிப்படகுகள் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு அலஸ்தோட்டம் பிரெஞ்சுகார்டன் கடற்கரையில் இடம் பெற்றது. ஷிப்ஸ் இன்ரநஷனல், இ.எப்.எஸ்., பீஸ் அன்ட்ஹோப்ட்ரஸ்ட் ஆகிய சர்வதேச தன்னார்வ அமைப்புக்கள் இணைந்து அலஸ்கார்டனில் உள்ள "யேசு கொஸ் பல்" தேவாலயம் ஊடாக இவை வழங்கப்பட்டுள்ளன.

படகுகளைக் கையளிக்கும் நிகழ்வில், "மெர்சி ஷிப்ஸ்" அமைப்பின் ஆசிய பசுபிக் பணிப்பாளர் லீசூ-ஜின், பீஸ் அன்ட் ஹோப் அமைப்பின் பிரதிநிதி கோர்டன் டெயிலர் மற்றும் மைக்கல் கோல் ஆகியோர் பங்குபற்றினர். அலஸ் தோட்டம் யேசு கொஸ்பல் தேவாலயப் போதகர் சிங்கராஜா ராஜவேல் நிகழ்வை நடத்திவைத்தார்.

"கடலன்னை தான் கடற்கோளாக வந்து அழித்தாள். அதே கடலன்னை தான் உங்களை வாழ வைக்கப் போகின்றாள்" என்று மெர்சிஷிப்ஸ் ஆசிய பசுபிக் பணிப்பாளர் லீ சூஜின் படகுகளைப் பெற்ற பயனாளிகள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார். பல நாடுகளிலிருந்து கிடைத்த நிதி உதவி மூலமே நாம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம் என்று அவர் கூறினார்.

## உளவளத்துணைச் செயற்றிட்டத்தில் பணிபுரியும் தொண்டர்களுக்கு ஈருருளிகள் வழங்கல்

(திருகோணமலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து டென்மார்க் செஞ்சிலுவைச்சங்கம் திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் உளவளத்துணைச் செயற்றிட்டத்தில் பணிபுரியும் தொண்டர்களுக்கு, ஈருருளிகள் வழங்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை நிலாவெளியில் உள்ள திருமலை மாவட்ட செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. முதல் கட்டமாக குச்சவெளிப்பிரதே செயலர் பிரிவில் பணிபுரியும் 11 தொண்டர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன. நிகழ்வுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் டாக்டர் இ.ஜி. ஞானகுணாளன் தலைமை வகித்தார். டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் உளவள செயற்றிட்டத்தின் திருமலைப் பிரதிநிதி எலின் ஜொனாஸ் டொற்றிரும் நிகழ்வில் பங்குபற்றினார். திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளான குச்சவெளி, கிண்ணியா, மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று ஆகிய பிரதேசங்களில் 18 நலன்புரி நிலையங்களில் டனிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தின் உளவளச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தொண்டர்களாக -தூரில் 17 பேர் ,ஈச்சிலம்பற்றில் 12 பேர், கிண்ணாயாளவில் 07 பேர், குச்சவெளியில் 11 பேர் என மொத்தம் 47 பேர் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் சிலர் தங்களின் ஈருருளிகளை கடற்கோளில் இழந்து விட்டனர் என்று நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது. கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்களில் குறிப்பாகக் குழந்தைகளை உளவளப் பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதே தொண்டர்களின் பிரதான பணியாக அமைகின்றது. அதற்கான பயிற்சியும் இத் தொண்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பலவருடங்களாகியும் கண்டாவளை மகா.வித் அபிவிருத்தி நடவடிக்கையில் புறக்கணிப்பு

(விசுவமடு)

1896 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கண்டாவளைப் பாடசாலை வளர்ச்சி கண்டு மகாவித்தியாலயமாகி பல வருடங்களாகியும் கல்வித்திணைக்களத்தினால் இப்பாடசாலையில் எதுவித அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை என கண்டாவளை கிராம அபிவிருத்திச் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

1958 ஆம் ஆண்டு கண்டாவளை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அமைத்துக் கொடுத்த கழிப்பறையையே தற்போது ஆசிரியர்கள் மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இதற்குப் பிற்பாடு கழிப்பறைகளோ அன்றி புதிய கட்டடங்களோ எதுவும் கல்வித்திணைக்களம் கட்டிக் கொடுக்கவில்லை எனவும் கண்டாவளை கிராம அபிவிருத்திச்சங்க செயலாளர் காசிமணியம் அவர்கள் தெரிவித்ததோடு இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறி வெளிநாடு சென்ற பழைய மாணவர்களால் தான் இப்பாடசாலைக்கு பல கற்றல் உபகரணங்கள் கிடைக்கப் பெற்றதாகவும்- 650 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் ஓர் பாடசாலை பழமை வாய்ந்த கட்டடம், பழமை வாய்ந்த மலசல கூடம் மட்டுமே கட்டடங்களாக இங்கு காட்சி தருவதோடு எந்த விதமான புதிய கட்டடங்களோ, கழிப்பறைகளோ கட்டிக் கொடுக்காததையிட்டு கண்டாவளை கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் விசனமடைந்துள்ளனர்.

அபிவிருத்தித்திட்டத்தில் எனிவரும் காலங்களிலாவது கண்டாவளை மகாவித்தியாலத்தையும் கல்வித்திணைக்களம் கவனத்தில் எடுக்கவேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழீழ வைப்பகத்தில் இன்று புத்தாண்டு கரும பீடம்

தமிழீழ வைப்பகம் சித்திரைப் புத்தாண்டு தினமான இன்று காலை 7.30 மணிமுதல் 11.00 மணிவரை புத்தாண்டுக்கருமபீட சேவை யை அனைத்து கிளைகளிலும் ஆற்றவுள்ளது. இன்றையதினம் வைப்புக்களை மேற்கொண்டு 2005 ஆம் ஆண்டிற்கான தேட்டங்களை ஆரம்பிப்பதோடு வைப்பகத்தினால் வழங்கப்படும் கைவிசேடத்தினைப் பெற்றுக் கொள்வதுடன் அழகியவர்ணத் தொப்பிகளையும் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் குழந்தைகளுக்கு 10.000 ரூபாவும் அதற்கு மேலும் வைப்புக்களை மேற்கொண்டு அதற்கான சிறப்பு அன்பளிப்பான அழகிய குடை ஒன்றினையும் பெற்றுக் கொள்ளலாம் அதேவேளை சிறுவர் தேட்டக் கணக்குகளை கொண்டுள்ள சிறார்களிற்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும் என்பதையும் வைப்பக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## வட்டக்கச்சிப் பிரதேசத்தில் தொடரும் திருட்டுகள்

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் அண்மை நாட்களாக பல திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. வட்டக்கச்சி, சிவிக்சென்றர், கட்சன் வீதி, ஆறுமுகம் வீதி, சில்வா வீதி ஆகிய குறுகிய வட்டத்திலேயே இச்சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. திருடப்படும் பொருட்கள் சில மீட்கப்பட்டும் வருகின்றது. உந்துருளி, நகைகள், துவிச்சக்கர வண்டி, கோழிகள், எனப் பல பொருட்களை தொடர்ந்து திருடப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இத்திருட்டுக்கள் தொடர்பாக வட்டக்கச்சி காவல் துறையினரிடம் கிடைத்த முறைப் பாட்டை அடுத்து காவல் துறையினர் துரித நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் திருடப்பட்ட உந்து ருளியில் இருந்து சீற்,சைற் கேஸ், பற்றி என்பனவற்றை திருடிவிட்டு உந்துருளி பல மைல்களுக்கு அப்பால் பற்றைக்குள் வீசப்பட்டு கிடந்தாகவும் கூறப்பட்டு வருகின்றது. எனவே இரவு வேளைகளில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டப்படுகின்றனர் (12)

## கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் பெப். மாதம் வரை 22818 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளனர்

(அலுவலக செய்தியாளர்)

இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி வரை 22818 குடும்பங்களைச் சேர்ந்த 88055 அங்கத்தவர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந் துள்ளதாக கிளி. அரச செயலக குறிப்பேட்டின் மூலம் தெரிய வந்துள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 12931 குடும்பங்களைச் சேர்ந்த 48979 அங்கத்தவர்களும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 3961 குடும்பங்களைச் சேர்ந்த 15672 அங்கத்தவர்களும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 3242 குடும்பங்களைச் சேர்ந்த 13260 அங்கத்தவர்களும் பச்சிளைப்பள்ளி பளை பிரதேச செயலர் பிரிவில் 2679 குடும்பங்களைச் சேர்ந்த 10144 அங்கத்தவர்களும் மீளக் குடியமர்ந்துள்ளனரெனவும் மேற்படி குறிப்பேட்டின் மூலம் தெரியவந்துள்ளது. (சோ)

## 23 இலங்கைத் தமிழ் அகதிகள் கடற்புலிகளால் மீட்கப்பட்டனர்

(மன்னார்)

இந்தியா மண்டப முகாமிலிருந்து 23 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளார்கள் இவர்களில் 7 ஆண்களும் 16 பெண்களும் அடங்குவர் இவர்கள் படகு மூலம் ஏற்றிவரப்பட்டு கச்சதீவில் இறக்கிவிடப்பட்டனர் இவர்களை பேசாலை மீனவர்கள் கண்டு உடனடியாக பேசாலையிலுள்ள கடற் புலிகளின் அரசியல்துறையினரிடம் அறிவித்து உடனடியாக பேசாலை கடற்புலிகளின் பொறுப்பாளர் அன்புராஜ் அவர்களின் தலைமையில் உடனடியாக கச்சைதீவுக்குச் சென்று மக்களை மீட்டெடுத்து பதிவுகளை கிராம உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொண்டு அவர்களின் சொந்த இடமான தலைமன்னார், அடம்பன், மன்னார். ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (18)

## நிகாப் வீடமைப்பு திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட காணி உரிமத்திற்கு உரித்துடைய குடும்பங்களுக்கு "நிகாப்" வீடமைப்பு திட்டத் தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. இதனடிப்படையில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் தொண்டமான் நகர், கிருஸ்ணபுரம், விநாயகபுரம், ஜெயந்திநகர், செல்வாநகர், மலையாளபுரம் ஆகிய கிராமங்களில் புதிதாக 194 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளதுடன் மற்றும் 49 வீடுகளுக்கு பகுதி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# யாழ். குடாநாட்டில் மே தினத்தினை சிறப்புறக் கொண்டாட ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

**யாழ். குடாநாட்டில் இவ்வருடம் மே தினத்தை சிறப்புறக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக மேதின ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த ப.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பொது அமைப்புக்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அவர் வேண்டியுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு தமது ஆலோசனைகளை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சோ)

## ஊனமுற்றோர் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள ஊனமுற்றவர்களது நலனைக் கவனத்திற் கொண்டு தாய்வான் அரசு ஊனமுற்றவர்கள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள் மற்றும் ஊன்று கோல்கள் என்பவற்றை வழங்கவுள்ளது.

இவற்றைப் பெறவிரும்புவோர் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கண்காட்சி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலர்பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையத்தால் தையல், மனையியல் கண்காட்சி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் இக் கண்காட்சியில் நவீன தையல் கலை வடிவங்களும் மனையியற் கலை வடிவங்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (சு)

# வறுமை காரணமாக பாடசாலை செல்வதில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் கண்ணகி அம்மன் அகதிமுகாமில் வசித்து வரும் கற்கும் வயதுடையோரில் 25 பேர் பாடசாலைகளுக்குச் செல்லாது தமது கற்றல் நடவடிக் கைகளை இடை நிறுத்தியிருப்பதாக மேற்படி அகதி முகாமின் செயலாளர் இதயராஜா கவலை தெரிவித்துள்ளார்.

யாழ். மயிலிட்டிப் பகுதியிருலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழும் இவ் அகதி முகாமில் வாழ்கின்ற சுமார் 110 கற்கும் வயதுடையோரில் 25 பேர் பாடசாலைகளுக்குச் செல்லாது தம் கல்வியை இடை நிறுத்தியுள்ளனர்.

வறுமை காரணமாக இவ்வாறு கல்வியை இடைநிறுத்தியுள்ள கற்கும் வயதுடையோரில் பலர் தம் குடும்ப வறுமையைப் போக்க கூலி வேலைகளில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33.சு)

# மண் கும்பான் உவர் நீர் தடுப்பு அணை புனரமைப்புச் செய்யப்படவுள்ளது

(தீவகம்)

யாழ். தீவகத்திலுள்ள மண் கும்பான் உவர் நீர்த்தடுப்பு அணைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இம் மண்கும்பான் உவர் நீர்தடுப்பு அணை புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென எட்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் உவர் நீர் தடுப்பு அணையின் ஸ்திரமற்ற தன்மையால் இங்கு நன்னீர் கிணறுகள் பலவும் உவர் தன்மையடைந்து வருகின்றமையைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(33)

# "ஜெய்க்கா" நிறுவனம் உதவி

யாழ்.குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளை புனரமைக்கும் நடவடிக்கையின் போது அப்பாடசாலைகளின் ஆய்வு கூட வசதிகளை விரிவுபடுத்திக்கொடுக்க "ஜெய்க்கா" என்ற யப்பானிய நிறுவனம் முன்வந்துள்ளது.

இவ்வாறான பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் முழுமையாக அழிந்து விட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசப்பாடசாலைகளின் மாணவர்களது விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது. (33)

# இன்று தென்மராட்சியில் வருடாந்த நாடக விழா

(தென்மராட்சி)

தென்மராட்சி கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இன்று வருடாந்த நாடக விழா இடம் பெறவுள்ளது.

சங்கத்தானை கிராம உத்தியோகத்தர் எஸ்.கே வேலாயுதபிள்ளை தலைமையில் மாலை 7.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இங்கு சிறப்புரைகளை தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் வழங்கவுள்ளார்.

மகளிர் கலைபண்பாட்டுக்கழகத்தின் செல்வி பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவான "சங்கநாதம்" நாடக நிகழ்வு மற்றும் வடமராட்சி கலை இலக்கிய கலைஞர் சங்கம் வழங்கும் "தென்னிந்தியத் திரைப் படங்கள் சமுதாயத்தைச் சீர்ப்படுத்துகின்றதா? சீரழிக்கின்றதா? எனும் பட்டி மன்றம் விடுதலைக் கலைஞர்களின் விடியலின் பயணம் தமிழீழ மகளிர் இசைக் குழுவின் இன்னிசை கானம் என்பன இடம்பெறவுள்ளன. (33)

# தபாலக தற்காலிக ஊழியர் பெரும் நெருக்கடி நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்தில் தற்காலிக ஊழியர்களாக பணியாற்றும் ஊழியர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

தற்காலிக ஊழியர்களாக சுமார் ஐம்பத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். இவர்கள் கடமை செய்யும் நாட்களுக்கே ஊதியம் வழங்கப்படுகின்றது. இவர்களில் சில ஊழியர்களுக்கு மாதத்தில் மிகக் குறைந்தளவு நாட்களே பணி வழங்கப்படுகின்றது. இதனால் இவர்களுக்கு மாதாந்தம் கிடைக்கும் வேதனம் அவர்களது குடும்ப செலவீனத்திற்கு போதுமானதாக இல்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## நாவற்குழி முந்நூறு வீட்டுத்திட்ட பிரதான வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

நாவற்குழி சந்தி முந்நூறு வீட்டுத்திட்டத்தில வசிக்கும் மககளால் தமது குடியிருப்புத்திட்டத்தின் பிரதான வீதிகளை புனரமைத்துத் தரும்படி தென்மராட்சி உதவி அரசாங்க அதிபரிடம வேண்டுகோள் வீடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலப் போரினால் சேதமடைந்த இந்த வீதிகள் எவையும் இதுவரை மீள் திருத்தம் செய்யப்படவில்லை வீதிகள அனைத்தும் பாரிய குன்றும் குழியுமாக வாகனங்கள் ஈருருளிகள் பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது. அத்தோடு மழை காலங்களில் வீதிகளில் மக்கள் செல்ல முடியாத அளவிற்கு மழைநீர் தேங்கி நிற்கின்றது. இதனால் பணிகளுக்குச் செல்வோரும், பாடசாலை செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங் களை எதிர் கொண்டுள்ளனர்.

இவ்வீதிகளை புனரமைத்து மக்கள் இலகுவாக போக்குவரத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி இக்கிராம அபிவிருத்திக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (28)

# கிளி.ஜெயந்திநகர் சந்தையை பழைய இடத்திற்கு மாற்ற உத்தரவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஜெயந்திநகர் சந்தை அமைந்துள்ள இடமானது சகல மக்களுக்கும் பல்வேறு இனனல்களைத் தோற்றுவித்து வருவதுடன் வீதிப போக்குவரத்திறகும் இடையூறாக அமைந்துளளது. எனவே அதனை உடனடியாகப் பழைய இடத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் இடம்பெற்ற அத்தியாவசியத் சேவைகள் குழுக் கூட்டத்தில் வைத்து கிளி அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் கரைசசிப் பிரதேச விசேட ஆணையாளருக்கு பணிப்புரையினை விடுத்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில; மேற்படி சந்தையானது டிப்போ கோணாவில் பிரதான வீதிக் கருகாமையில் அமைந்துள்ளதனால் வீதிப் போக்குவரத்திற்கு பாரிய ஊறு விளைவிககக்கூடியதாக அமைந்துள்ளதுடன் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏறபடுத்தும் வகையில் இச் சந்தை அமைநதுள்ளது எனவே இதனைக் கருத்திக் கொண்டு உடனடியாக மேற்படி சந்தையினை பழைய இடத்திற்கு மாற்றுதவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளும் வண்ணம் அரச அதிபர் பிரதேச சபை விசேட ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சி நெறி வகுப்புக்கள்

(கிளிநொச்சி)

சுனாமிப் பேரலை அனர்த்தத்தாலும்,போர்ச்சூழல் காரணமாகவும் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களின் சமூகப் பொருளாதார வள அணிகளை மீளப்புனரமைத்து. அபிவிருத்தி வேலைத் திட் டங்களை முன்னெடுப்பது தொடர் பாக சமூக வலுவூட்டாளர்களுக் கான பயிற்சி நெறி வகுப்புகள் தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக வலுவூட்டல் பிரிவினால ஒழுங்கு படுத்தபபட்டு நடாத்தப்பட்டு வருகின்றது.

முதற் கட்டமாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 100இற்கும் மேற்பட்ட வலுவூட்டாளர்களுக்கான பயிறசி நெறி வகுப்பு கடந்த 9ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையின் கீழ் நிருவகிக்கப்பட்டு வரும் "வெணபுறா" செயற்கை உறுப்புத் தொழில் நுட்பப் பிரிவின் பலநோக்கு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.





இப் பயிற்சி நெறியின் நான்காம் நாளான நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழவுக கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி கலந்து கொண்டு கருத்துரை வழங்கியுள்ளர்.

சமூக வலுவூட்டாளர்களின் பணிகள் பற்றியும் அந்தப் பணிகள் தொடர்பான முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக விளக்கிய அவர் போர்ச் சூழல் காரணமாகவும், சுனாமிப் பேரலை அனர்த்தம் காரணமாகவும், மக்கள் எதிர் நோக்கி வந்த, எதிர் நோக்கி வருகின்ற இன்னல்கள் பற்றியும் அவற்றின் எதிர் விளைவுகளாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றியம், பொருளாதாரப் பின்னடைவுகள் பற்றியும் எடுததுக் கூறியதுடன் அந்த மக்கள் மத்தியில் ஒவ்வொரு சமூக வலுவூட்டாளரும் கடைபபிடிக்க வேண்டிய அணுகு முறைகள் பற்றியும் சமூக வலுவூட்டாளர்களின் அணுகு முறைகளைப் பொறுத்தே அந்தந்தக் கிராமங்களின் வாழ்கின்ற மக்களின் முழுமையான பங்களிப்புடன் கூடிய புனரமைப்பு புனர்நிர்மாண அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்பது தொடாபாகவும் எடுத்து விளக்கியுள்ளார்.

# சுனாமி பற்றி தலைவருக்கு சொல்ல எதுவும் இருக்கவில்லை அவர் அனைத்தையும் உடனடியாக அறிந்திருந்தார்

நான் தலைவரைச் சந்தித்து சுனாமி பற்றிய செய்தியைக் கூறுவதற்கு முன்னர் தலைவர் எல்லா விடயங்களையும் அறிந்திருந்தார். இயக்கத்தின் அனைத்துத் துறையினருக்கும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்குரிய ஆலோசனைகளைக் கூறிக்கொண்டிருந்தார். இயக்கத்தின் அனைத்து வளங்களையும் தயக்கமில்லாமல் பயன்படுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்தார். தனது மெய்ப்பாதுகாவலர் அணியிலிருந்த போராளிகளிலிருந்தும்கூட மீட்பு நடவடிக்கைகளுக்கான ஆளணிகளை அனுப்புவதிலேயே குறியாகயிருந்தார். யுத்தம் செய்து மீட்ட முல்லைத்தீவை நாங்கள் பார்க்கின்ற பொழுது பெரும் ஆக்கிரமிப்பை வென்ற நிலையில் பெரும் நகரத்தைக் கைப்பற்றிய வெற்றிக்களிப்பில்தான் எங்களது பார்வை இருந்தது. அதனால் அழிவுகள் எங்களைத் தாக்கவில்லை. எங்களை மீறிய இயற்கையின் சக்தி இப்படிப் பெரும் அழிவை ஏற்படுத்தியிருப்பது பெரும் சோகமான நிகழ்வு என சுனாமி களமுனையில் நின்று நிலைமைகளை நேரடியாக அவதானித்துச் செயற்பட்ட தமிழீழவிடுதலைப்புலிகளின் மூத்ததளபதியும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டு அம்மான் அவர்கள் பகிர்ந்துகொண்டவற்றை இந்தப் பகுதியிலும் தருகிறோம்.

பகுதி 51



**அன்று** பிற்பகல் ஐந்து மணியளவில் தளபதி தீபனும் நானும் மருதங்கேணிவைத்திய சாலைக்குப் போனோம். அங்கே உயிரிழந்தவர்களின் உடல்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. ஒரு வைத்தியசாலையே மரண வீடாக இருந்தசூழலை நான் அன்றுதான் முதலில் பார்த்தேன். வேதனையாக இருந்தது. அந்த உடல்களை அடக்கம் செய்வதற்கான ஒழுங்கு படுத்தல்களில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் தலைமையிலான அரசியல் துறைப் போராளிகள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சுனாமியால் உயிரிழந்த இவ்வளவு தொகையானவர்களின் உடல்களை நான் கண்டதும் வடமராட்சி கிழக்கில்தான்.

வடமராட்சி கிழக்குடன் ஒப்பிடும் போது முல்லைத்தீவு பேரிழப்பைச் சந்தித்திருந்தது. முல்லைத்தீவில் குறுகிய இடத்தில் பெரும் அழிவு ஏற்பட்டிருந்தது. வடமராட்சி கிழக்கில் நீண்ட பிரதேசத்தில் இந்த இழப்பு ஏற்பட்டிருந்தது.வடமராட்சிகிழக்கில் அழிவுகளை பார்க்கின்றபொழுது மாலைநேரமாகியதால் அதன் நிலவரம் முழுமையாகத்தெரியவில்லை. வீடுகளின் சுவர்களின் முக்கால்வாசி உயரத்துக்குமேல் தண்ணி ஏறிய தடங்களைபார்த்தோம்.

இந்த நிலையில் தமிழீழத்தின் அநேகமான கரையோரக் குடியிருப்புப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று வந்தவன் என்ற அடிப்படையிலும் முல்லைத்தீவின் அழிவுகளை நேரடியாகப் பார்த்த நிலையிலும் இழப்புக்கள் தொடர்பாக உடனடிக் கணிப்பீடு ஒன்றைச் செய்திருந்தேன்.என்னால் செய்யப்பட்ட அந்தக் கணிப்பீடு சிலவேளைகளில் மிகைப்படுத்தப் பட்டதாகவும் இருந்திருக்கலாம்.

சுனாமி அலைகள் முல்லைத்தீவைத் தாக்கிய மாதிரி வேகத்தோடு தமிழீழத்தின் கரையோரப்பிரதேசங்களைத்தாக்கியிருந்தால் தமிழீழ மக்களில் ஐம்பதாயிரம் பேரை நாங்கள் இழந்திருப்போம் என்று தான் நினைத்தேன். அந்தவேளையில் எனது நினைவு அப்படித்தான் இருந்தது.


இப்படியான இயற்கையின் சீற்றத்தால் எங்கள் மக்களை இழந்ததும் குடியிருப்புக்களை பறிகொடுத்ததும் எங்களால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. அது பேரதிர்ச்சி, பெரும் சோகம். இந்த நிலையில் நாங்கள் எப்படியான உடனடி வேலைகளைச் செய்யவேண்டும்? என்கின்ற எண்ணங்கள் தான்எங்களின் முன் இருந்ததே தவிர இந்த சம்பவங்களின் ஒட்டுமொத்த பரிமாணத்தை யோசிக்கவில்லை.ஏற்கனவே நீண்ட தொடர்யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இது ஒருபேரடி என்பதைத்தான் என்னால் அந்த இடத்தில் சிந்திக்க முடிந்தது.


இந்திய இராணுவம் வெளியேறியதன் பின்னர் மணலாறில் இருந்து முல்லைத்தீவிற்கு வந்து நகரைச்சுற்றிப்பார்த்தோம். வாகனங்களை நிறுத்திவிட்டு உணவகத்தில் உணவு அருந்தினோம். நான் முதன்முதலில் முல்லைத்தீவிற்கு வந்த சந்தர்ப்பம் அதுவாகத்தான் இருந்தது.

அப்போது முல்லைத்தீவு ஒரு பெரிய விசாலமான நகரமாக இருந்தது. பின்னர் யுத்த நடவடிக்கைகளால் அதன் பரிமாணங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப் பட்டதன் பின்னர் பூச்சியத்தில் இருந்து ஐம்பது வீதமளவுக்கு மீளவும் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த நிலையில் சுனாமி அனைத்தையும் அழித்து மீண்டும் பூச்சியநிலைக்கு கொண்டு போய்விட்டது.

எந்தக்கடுமையான யுத்தசூழலிலும் முல்லைத்தீவு இப்படியான பேரதிர்ச்சிதரக்கூடிய மனித அவலத்தைச் சந்திக்கவில்லை. யுத்த மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையில் மக்கள் தங்களை காப்பதற்காக இடம்பெயர்ந்து சென்று பெரும் அழிவுகளில் இருந்து தப்பித்துக் கொண்டனர்.அப்படி இருந்தும் ஒருசில தாக்குதல்கள் சில படுகொலைகள் என்பன அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் அவற்றை எல்லாம் மிஞ்சும் வகையில் சுனாமி பெரும் மனித அவலத்தை தந்துவிட்டது.

கட்டடங்களைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய, பெறுமதியான கட்டடங்களை யுத்தம் ஏற்கனவே அழித்துவிட்டது. அவ்வாறு அழிக்கப்பட்ட கட்டடங்கள் கடைசிவரை முல்லைத்தீவில் எழவே இல்லை. அந்த வகையில் பார்த்தால் யுத்தம் ஏற்படுத்திய அழிவு என்பது பெரியது. ஆனால் சுனாமி யுத்தத்தின் பின்னர் உருவாகிக் கொண்டிருந்த கட்டுமானங்கள் அனைத்தையும் மிச்சமில்லாமல் சிதைத்துக் கொண்டுபோய்விட்டது.





யுத்தம் செய்து மீட்ட முல்லைத்தீவை நாங்கள் பார்க்கின்றபொழுது எங்கள் பார்வை வித்தியாசமானதாக இருந்தது. பெரும் ஆக்கிரமிப்பை வென்ற நிலையில் பெரும் நகரத்தைக் கைப்பற்றிய வெற்றிக்களிப்பில் எங்களது பார்வையிருந்தது. இப்படி எல்லாம் அழிந்துவிட்டதே என்ற வேதனை இருந்தாலும் ஆக்கிரமிப்பை வென்றுவிட்டோம் என்ற நம்பிக்கையில் பார்த்ததால் இந்த அழிவுகள் எங்களைப் பாதிக்கவில்லை.ஆனால் இந்தச் சம்பவம் "எங்களை மீறிய இயற்கையின் ஒரு பெரும் சக்தி இப்படியான அழிவைச் செய்துவிட்டது" என்பது ஒரு சோகமான நிகழ்வு. யுத்தத்தைவிட சுனாமி தான் பெரும் அழிவு உணர்வைத்தந்தது. யுத்தத்தை நாங்கள் வெற்றியோடு பார்க்கின்றதன் காரணத்தால் அழிவுகள் எங்களை தாக்குவதில்லை.

இருப்பினும் முல்லைத்தீவில் யுத்தம்பெரும் இழப்புகளை ஏற்படுத்தியிருந்தது.அதில் முல்லைத்தீவை முழுமையாக இழந்திருந்தோம். அப்படி இழந்தவற்றை நாங்கள் மீண்டும் முழுமையாக உருவாக்கிக்கொள்ளவில்லை. யுத்தம் சிதைத்தவற்றின் எஞ்சியவற்றை சுனாமி சிதைதுக்கொண்டு போய்விட்டது.

சுனாமி பற்றிய முன்னனுபவம் அதுபற்றிய அறிவில்லாத தன்மைதான் அதிக இழப்புக்களிற்கு காரணமாக இருந்தது.இத்தகைய தாக்கத்தில் சிக்கிய மக்கள் மீண்டும் கடலோடு இணைவார்களா? கடற்தொழில் வாழ்க்கைக்குள் உடனடியாக வந்து பொருந்துவார்களா? என்பது உடனடியாக அச்சமாகத்தான்இருந்தது ஆனால் நான் அச்சப்பட்டதைவிட மக்கள்விரைவாக மீண்டும் கடலோடு பொருந்திவிட்டார்கள்.

சுனாமி அலைகள் ஏற்படுத்திய பெரும் தாக்கத்தை, அதனால் எழுந்த நெருக்கடிகளை இயக்கம் எப்படி வெற்றிகொண்டது? என்ற கேள்வியை ச்ர்வதேச மட்டத்தில் நிலமைகளை அவதானித்தவர்கள் என்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டிருந்தார்கள். யாழ்.குடாவில் இருந்து ஐந்துலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து ஒரு இரவில் வெளியேறிக கொண்டிருந்தார்கள். அப்படி வெளியேறிய மக்களை நாங்கள் எந்தச் சுகாதாரப்பிரச்சினையோ, பட்டினிச்சாவோ ஏற்படாமல்-கையாண்ட அனுபவம் எங்களது இயக்கத்திற்கு இருக்கிறது என அவர்களுக்குப் பதிலளித்திருந்தேன்.

நாம் போரை தொடர்ந்து சந்தித்துக்கொண்டிருந்த காரணத்தால் எங்களது நிவாரண நடவடிக்கைகளும் மீட்பு நடவடிக்கைகளும் அந்தளவு துரிதகதியில் நடைபெற்றன. இந்தளவு துரிதமான செயற்பாட்டுக்கு காரணம் முழுக்க முழுக்க நீண்டகாலப் போர்அனுபவம் கற்றுத்தந்த பாடம்தான்

நெருக்கடியான நிலைமைகளை அச்சமில்லாமலும் பதற்றமில்லாமலும் அதிர்ச்சியடையாமலும் எதிர்கொள்கின்ற தன்மையை எங்களது போராளிகளும் சரி காவல்துறையினரும்சரி ஏன் எங்களதுமக்களும் சரிபெற்றிருந்தார்கள்.இதுநிலமையைச் சீராக்குவதற்குபெரிதும் கைகொடுத்தது.

சுனாமி பற்றிய செய்தியைக் கூறுவதற்காக தலைவரைச் சந்திக்கச் சென்றிருந்த வேளையில் தலைவர் எல்லா விடயங்களையும் அறிந்திருந்தது மட்டுமல்லாமல் இயக்கத்தின் அனைத்துத்துறையினருக்கும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்குரிய ஆலோசனைகளைக் கூறிக்கொண்டிருந்தார்.

அ.லோகீசன்

இயக்கத்தின் வளங்கள் அனைத்தையும் மீட்பு நடவடிக்கைகளில் தயக்கமில்லாமல் பயன்படுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்ததார்.அத்துடன் தனது மெய்ப்பாதுகாவலர் அணியிலிருந்த போராளிகளிலிருந்தும் கூட மீட்பு நடவடிக்கைகளுக்கான ஆளணிகளை அனுப்புவதிலேயே குறியாக இருந்தார்.

இப்பேரவலம் மக்களுக்கு உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தி விடாமல் இருக்கத்தக்க வகையில் மக்களைக் கடலோடு தொடர்ந்து தொடர்புடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தைத் தமிழீழக் கடற்படையின பொறுப்பாளர்களுக்கும் அரசியல் துறையினருக்கும் கூறிக் கொண்டிருந்ததினையும் மருத்துவ நடவடிக்கைகளில் இயக்கத்தின் மருத்துவப் பிரிவு முழுமையாக ஈடுபடுவதற்குரிய உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்ததையும் கண்டேன்.

உண்மையில் சுனாமி பற்றி நாங்கள் தலைவருக்கு சொல்வதற்கு ஏதுமில்லாமல் தலைவர் எல்லா விடயங்களையும் முன்னரே உணர்ந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து விட்டிருந்ததையே காணக்கூடியதாக இருந்தது. என சுனாமிஅலைகள் ஏற்படுத்தியிருந்த விளைவுகள் பற்றிய தனது அனுபவத்தைப் பகிர்ந்தார் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் அவர்கள்.

சுனாமிப் பேரலைகள் முல்லையில் நிகழ்த்திய கோரம் பற்றியும் அதனால் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றியும் அத்தகைய பெரும் இழப்புக்கள் எப்படி எதிர்கொள்ளப்பட்டன என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றியும் தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள பகிர்ந்தவை அடுத்துவரும் பகுதிகளில்.

தொடரும்.

# சித்திரைப்புத்தாண்டு சிறப்பிதழ்

## பாரெங்கும் பைந்தமிழ் ஓசை எழுப்பிடப் பார்த்திப ஆண்டே வருக! வருக!!

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை காலச்சக்கரம் சுழல்கின்றது. நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக உருண்டோடிக் கொண்டேயிருக்கிறது. ஆசை,நம்பிக்கை,கனவு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏராளமாகச் சுமந்து கொண்டு பிறக்கும் ஒவ்வொரு வருடத்தையும் நாம் நம்பிக்கையுடன் எதிர் நோக்குகின்றோம் இதே நம்பிக்கையுடன் தான் நாம் அனைவரும் புத்தாண்டை வரவேற்கின்றோம்.

பழைய தாரண வருடம் விடைபெற்றுச் செல்ல புதிய பார்த்திப ஆண்டு 13.04.2005 புதன் கிழமை முன்னிரவு 10 மணி 17 நிமிடத்தில் உதயமாகின்றது. இது இலங்கையில்,தமிழ் சிங்களம் என இருவேறு சமூகத்தினரால் கொண்டாடப்பட்டு வரும் மிக விசேடமான திருநாளாகும். இந்துக்களும், பௌத்தர்களும் வருடப்பிறப்புத்தினத்தில் மிகப் பழமையான மரபுகளைப் பின்பற்றி சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவர்.

பழையவருடத்தில் நாம் தெரிந்தோ,தெரியாமலோ செய்த தவறுக்காகவும் உடல் உள நோய்தீரப் பிராயச்சித்தமாகவும், உஷ்ணம் குறைந்து குளிர்ச்சி உடல் எங்கும் ஏற்படவும், மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து கொள்வது தொன்று தொட்டு வரும் கொள்கை.

நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும் இனி நடப்பவை நல்லவையாக அமையட்டும். பழையனகழிதலும் புதியன தெரிதலும் இயற்கை நம்மிடையே காணப்படும் தீய பழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து பிறக்கும் புதிய வருடத்திலாவது புதிய மனிதனாக வாழ்த்திட சங்கர்ப்பம் கொள்வோம்.

நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றிலும் இயற்கை நமக்குச் சேவை செய்வதைப் பார்க்கின்றோம். சூரியன் ஒளியையும், காற்று குளிர்ச்சியையும் கொடுக்கின்றது. மேகங்கள் மழையைப் பொழிகின்றன. செடி கொடிகள் உணவையும் மூச்சுக்காற்றையும் தருவிக்கின்றன. இதற்கு பதிலாக நாம் அவற்றிற்கு என்ன செய்து கொடுக்கிறோம். ஆக ஒரு யக்ஞம் நடத்தும் உணர்வோடுதான் அவைதம் வாழ்வைப் பகிர்ந்து கொள்கின்றது. தம்முடைய கடமையைச் செய்வதிலேயே தம் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அடைகின்றன. உலகத்தில் ஜீவராசிகள் தோன்றுவதற்கு முன்பே இயற்கை அதற்குரிய நிலைகளைத் தயார் செய்திருக்கின்றது. உயிரின் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையிலும் மலையும்,கடலும்,ஆறுகளும், ஆகாயமும் பங்கு கொண்டு தனது கடமைகளைச் செய்து முடிக்கிறது. அவை ஒத்துழைத்தால் மட்டுமே உயிர்கள் வளர்ச்சி பெறவும், முன்னேறவும் முடிகின்றது. ஆனால் இயற்கை தம் கடமை உணர்ச்சிக்காகப் பலன் எதனையும் பதிலுக்காக எதிர்பார்ப்பது இல்லை.

கீதையில் பகவான் "இந்தத் தியாக உணர்வால் நீ மேம்பட வேண்டும்" இப்படி ஓர் உணர்ச்சியுடன் வாழ்க்கையை நடத்த வேண்டும் அப்போது உனக்கு வேண்டியதைக் கொடுக்கும் பசு (காமதேனு) கிடைக்கும். அது உனக்கு அளவில்லாத வளத்தைச் சுரக்கும் என்று கூறினார்.

இது வசிட்டமா முனிவர் வளர்த்த காமதேனு அல்ல நம் முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாது அள்ளித்தெளிக்கும் இயற்கை தான் அந்த இயற்கையின் எல்லா அம்சங்களிலும் இந்தச் சுயநலம் இல்லாத சேவை உணர்வு இருக்கிறது. இதுவே இறைவன் நமக்குத் தந்த செல்வம்.

இதிலிருந்து மாறுபட்டு தன்னிச்சையாக நடந்து கொள்வது மனிதகுலம் மட்டுமே. தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையை இயற்கையின் இயல்பான தன்மையை, தர்மத்தை நலம் தரும் சுபாவத்தை மனிதன் தன் செயல்களால் கெடுத்துப் பாழ்படுத்துகிறான். அதை இயற்கை அன்னை விரும்புவதில்லை. நாம் செய்வதைப் போலவே அவை சிலவேளைகளில் தமது மறுப்பை வெளியிடுகின்றன இயற்கையுடன் ஒத்துழையுங்கள் அவற்றைப் போலவே இயல்பாகச் சுயநலம் இன்றிப் பாடுபடுங்கள். தர்மம் தவறாது செயற்படுங்கள். அவை உங்களைப் பாராட்டும். உங்கள் வாழ்க்கையின் வளத்திற்குத் துணைசெய்யும். சுருக்கமாகச் சொன்னால் மனிதன் தான் நம்பிக்கை உணர்வுடன் வாழ்க்கையில் ஈடுபட்டு இயற்கையை வணங்கும் போது அது அவனைப் பாராட்டிப் பசுமையையும் வளத்தையும் அள்ளித் தருகிறது. இயற்கையைவேண்டினால் அது மழையைப் பொழிவிக்கும் வளத்தை உண்டாக்கும் எனச் சொல்வது இதனால் தான்.

இன்றைய நிலையிலும் கூட விஞ்ஞான முன்னேற்றத்தால் இயற்கை அழிவு ஏற்பட்டு மனித வாழ்க்கை பாழ்படும் நிலையிலும் கூட பகவத் கீதையின் இந்த அறிவுரையின் பொருளை உணர்ந்து நாம் திருந்தவும் மேம்படவும் வாய்ப்புண்டு.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் முகம் கொடுத்து வந்த இடர்பாடுகள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. நம் நாட்டில் சகல மக்களும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ இப் புதிய பார்த்திப ஆண்டு வழிசமைக்கும் என்ற நம்பிக்கை அனைத்து மக்களிடமும் வேரூண்டத் தொடங்கியுள்ளது.

ஒரு கிணறு வெட்டுவதிலும் பார்க்க ஒரு குளம் வெட்டுவது மிகுந்த மகிழ்வைத்தரும் உண்மையான மகிழ்வு நாம் எவ்வளவு பொருள் ஈட்டுகிறோம் என்பதில் இல்லை. நாம் ஈட்டிய பொருளில் எவ்வளவு தர்மம் செய்கிறோம் என்பதில் தான் தங்கியிருக்கிறது.

பேசுவதை விட மௌனமே சிறந்தது. பேசித்தான் தீர்க்க வேண்டுமென்றால் அந்தப் பேச்சு உண்மையாய் நேர்மையாய் இனிமையாய் அமையவேண்டும். வாழ்வில் முன்னேற்றம் அடைய சிந்தனை அவசியம் ஆனால் வெறும் சிந்தனை மட்டும் போதாது சிந்தனையைச் செயல் வடிவம் கொள்கையாக மாற்றவேண்டும்.

மனநிறைவோடு தொடங்கவுள்ள இப்பார்த்திப ஆண்டு நமது நாட்டின் நீண்டகால அவலநிலையை முற்றாக ஒழிக்கும் ஆண்டாக மலர வேண்டுமென மனமார வாழ்த்துவோம்.

"சிவாகமக்கிரியா தத்வநிதி"
சிவஸ்ரீ. கு. இரத்தினேஸ்வரக் குருக்கள் பிரதம சிவாச்சாரியார்.
முருகன் தேவஸ்தானம். கிளிநொச்சி.






எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சிறுவர் முதல் பெரியோர் வரை விரும்பி அணியும் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள
மைதிலி நகைமாடம்
இல: 89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7902
(சி-11498)




எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சுபமுகூர்த்தப்பட்டுப்புடைவைகளின் மகத்தான தரமான தெரிவுகளுக்கு நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்
மகா சில்க்ஸ்
32,40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
பியூட்டி சில்க்ஸ்
69, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7359
(சி-11499)





எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பார்த்தீப வருட நல்வாழ்த்துக்கள்!
அசல் 22 கரட் தங்கநகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
மணி ஐயப்பா நகைமாடம்
யாழ்சாலை, கிளிநொச்சி (ஈழநாதம் பணிமனை முன்பாக)
தொ.பே: 021-228 5981
(சி-11500)




கல்யாணப்பட்டுப்புடைவைகளின் கைராசி நிறுவனம்
ராசி சில்க்ஸ்
70,71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
யாழ்நகரில் உங்கள் விருப்புத்தெரிவுக்கு கைராசியான இணை நிறுவனங்கள்
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
அனைவருக்கும் ஏற்ற ஆடைத்தெரிவுகளுக்கு
நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021-222 5573
(சி-11702)




எமது வாடிக்கையாளர்களுக்கு பார்த்தீப வருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்
கிளிநொச்சி நகரிலும் மல்லாவி நகரிலும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மனங்கவரும் ஆடைத்தினுசுகளுக்கும் சிறுவர் முதல் பெரியோர் வரை அணியக்கூடிய ரெடிமேட் ஆடை வகைகளுக்கும் அழகுசாதனப்பொருட்களுக்கும் நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய கைராசியான ஸ்தாபனம்
முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யாழ்சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி.
(சி-11704)


YAMAHA
Touching Your Heart
Castrol
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் மற்றும் எல்லோருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!
2005
YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
HAPPY NEW YEAR 2005
யாழ் நகரில் புத்தம் புதிய யமஹா உந்துருளிகள் வெளி இணைப்பு இயந்திரங்கள் போலியற்ற உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ளவும், சேவிஸ் செய்து கொள்ளவும், உலகின் முதல் தர உராய்வு நீக்கி காஸ்ட்ரேலை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஒரு நிறுவனம்
யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna.
021 4590 200,
0777 563 803.
(சி-11703)





அனைவருக்கும் அன்புகலந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச்சாறி வகைகள் ஸ்கேட் அன் பிளவுஸ் கவுன் வகைகள் சல்வார் கமீஸ் வகைகள் ஆகியவற்றை ஒரேஇடத்தில் பெற்றுக்கொள்ள
DRESS POINT
ட்ரெஸ் பொயின்ட்
இல:-23, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
SM Graphis
(சி-11705)


ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
மரத்தளபாடத் தொழிலகம்
SRIMUTHUMARIAMBAL
TIMBER FURNITURE INDUSTRIES
ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
மரத்தளபாடத் தொழிலகம் சார்பில் அனைவருக்கும்
எமது தமிழ் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
எம்மிடம் அனைத்து வகையான மரங்களும்
பலகைகளும் தீராந்தி வகைகளும்
மற்றும் ஓடரின் பெயரில் மரத்தளபாடங்களும்
வீட்டுக் கூரைவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தென்மராட்சியிலேயே முற்றிலும்
இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்கூடம்
ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
மரத்தளபாடத் தொழிலகம்
இல: 12 பிரதான வீதி,
சாவகச்சேரி.


அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!
வரதன் லேனேர்ஸ் அரசஅங்கிகாரம் பெற்ற ஏ தர சாரதி பயிற்சி
பாடசாலை வன்னியிலும் யாழ்மண்ணிலும் அனேகமான
சிறந்த சாரதிகளை உருவாக்கி ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்களை
எடுத்து சிறந்த சேவையாற்றும் வரதன் சாரதி பயிற்சி பாடசாலை
வெகுவிரைவில் கிளிநொச்சியிலும்
எமது கிளை நிறுவப்படும் என்பதை தெரியப்படுத்துகின்றோம்.
வரதன் சாரதி பயிற்சி பாடசாலை
யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி, இல:133
தொ. பே: 0212228037
எமது கிளைகள்:
சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி
தொ. பே: 0712373294.
நெல்லியடி மனோ தொலைத்தொடர்பகம்
கொடிகாமம் வீதி தொ. பே: 0212263072
பருத்தித்துறை கஜமுகன் தொலைத் தொடர்பகம்
2ஆம் கட்டை தொ. பே:0212263522
சங்கானை மல்லாகம் வீதி தொ. பே: 0777110868
அச்சுவேலி தியேட்டர் அருகாமை
தொ. பே:077110868
VARATHAN LEARNERS
வரதன் லேனேர்ஸ்
STOP
25
(சி-11685)


DIAMOND HOUSE
வைர மாளிகை
எமது அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை
வைரமாளிகை நிறுவனம் சார்பாக அதன் உரிமையாளரும்
ஊழியர்களும் தெரிவிக்கின்றோம்!
ஆப ரண உலகின்
ராஜகோபுரம்
வைரமாளிகை நகை
வியாபாரிகள்
இல: 79, (46) கன்னாத்திட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-11758)


வாணிவிலாஸ் ஸ்தாபனத்தார் சார்பில் அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
சுத்தம் நறுமணம் சுவையோடு திகழும் அன்றும்
இன்றும்
ஸ்ரீவாணிவிலாஸ்
இல:372 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
வாடிக்கையாளர்களின்
நல்வரவை நாடுகின்றோம்
(சி-11757)


எம்இனிய உறவுகள் அனைவருக்கும் தரன் ரேடர்ஸ்
நிறுவனத்தின் சார்பில் உள்ளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்
எம்மிடம் கட்டடப் பொருட்கள்
இரும்புப் பொருட்கள் பெயின்ற் வகைகள்
கூரைத் தகடுகள் அனைத்தையும்
நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்
தரன் ரேடர்ஸ்
இல:130,132. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 0212222664, 0212227184
(சி-11756)


TOSHIBA
எம் உறவுகள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஜப்பானிய தொழில் நுட்பத்துடன் நீடித்த பாவனைக்கு
உங்கள் முன்
1 முதல் 5வருட
உத்தரவாதம்
ஏசியன் எலக்ரோனிக்ஸ் சென்ரர்
11/4ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-11763)


எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது மகிழ்ச்சி கரமான சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.
இதுகடையல்ல புடவைகளின் கடல்
நவீன உலகின் புடவைகளின்
சாம்ராஜ்யம்
செல்லமுத்து புடவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி
தொ.பே. 021-2263238


எம் அன்புக்குரிய தமிழ் மக்களுக்கு எமது இதயம் கனிந்த சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.
எங்களிடம் அனைத்து வகையான வீட்டுத் தளபாடங்களையும்
நியாயமான விலைகளில்பெற்றுக் கொள்ளலாம்
தம்ரோ
ஜமுனா ஸ்ரோஸ்
இல: 03 பிரதான சாலை நெல்லியடி.
தொ.பே:0212263970, 0777730332
(கி-11678)


VESTA
NELLI CORDIAL
வெஸ்ராவின் வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்இனிய சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்.
நெல்லிக்கிறஸ் தயாரிப்பில் முன்னோடிகள் சுவையும்.
மணமும் மாறாதவண்ணம் தயாரிப்பில் சிறந்து விளங்கும்
வெஸ்ரா இண்டஸ்ரிஸ்
குளப்பிட்டி பிரதான சாலை,
ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம்.
(கி-11667)


வசந்தம் தரும் இனிய புத்தாண்டு கொண்டாடும் தமிழ் மக்களுக்கு எமது வாழ்த்துக்கள்!
யாழ். மண்ணுக்கு வருகைதரும் உல்லாசப் பிரியர்களுக்கு
ஏற்ற இல்லிடத்தைக் கொண்ட மனங்கவரும் தங்குமிடம்
Peninsula Holiday Rest
Tourit Hotel & Rertaurant
281, Kandy Road, Jaffna.
Tel: 021-4590374, Mobil: 077-6102405
(கி-11677)


யாழ். நகரில் உணவுப் பிரியர்களின் உலகம்
கொசி கொட்டல் அன் ரெஸ்ரோரண்ட்
நிறுவனத்தார் ~ தமது அன்பர்கள், நண்பர்கள்
வாடிக்கையாளர் மற்றும் பரந்து வாழும் தமிழ் மக்கள்
அனைவருக்கும் இதயம் கனிந்த சித்திரைப் புத்தாண்டு
நல் வாழ்த்துக்களை உரித்தாக்குகிறார்கள்.
அதி உன்னத சுவை – மகிழ்ச்சியையும்
மனநிறைவையும் தருகின்ற கனிவான உபசரிப்பு
குதூகலமாய் குடும்பத்தோடு கொண்டாடி மகிழ
யாழ்.நகரில் தனிச்சிறப்பை கொண்டு விளங்கும்
கொசி கொட்டல் அன் ரெஸ்ரோரண்ட் உங்களை அன்புடன்
வரவேற்கிறது.
COSY HOTEL & RESTAURANT
மணியம்ஸ் பில்டிங்
இல: 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021-2225899
021-2227100
மொபைல்: 077-67304545
COSY
RESTAURANT
HOTEL
(சி-11764)



அனைவருக்கும் இனிய தமிழ் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீன தங்கும் அறைகள்
அனைத்து வசதிகளுடன் யாழ்வரும்
உல்லாசப் பயணிகள் விரும்பிடும்
தங்கும் விடுதி
US GUEST HOUSE
யு.எஸ் கெஸ்ட் கவுஸ்
இல:874 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே:0212227029, 0214590681, 0777222242,
பக்ஸ்:0214590681




S.K.Y.ELECTRONIC SYST
எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் சார்பில் புத்தாண்டு வாழ்த்துக்கள்
எங்களிடம் சகலவிதமான கணினிகள் ஒரு வருட உத்தரவாதத்துடன்
மற்றும் ரீவி, டெக், பிரிஜ், மின் விசிறிகள், மின் உபகரணங்கள், அலங்கார விளக்குகள் என்பனவற்றை
நீங்கள் ஓரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய மக்கள் நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற ஸ்தாபனம்.
ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்
இல: 01 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225349
(சி-11666)




இரத்தினம் பேபி அன்ட் பான்சி
RATHTHINAM BABY AND FANCY
MAIN STREET, NELLIADY.
நெல்லியடியில் தனிமுத்திரை பதித்து வரும் இரத்தினம் பேபி பான்சி
ஸ்தாபனத்தார் சார்பில் அனைவருக்கும் எம்நெஞ்சம் நிறைந்த சித்திரைப்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மங்கையர் முதல் குழந்தைகள் வரை அனைவரும்
விரும்பிடும் பேபி பான்சி இன்றுபோல் என்றும்
உங்கள் வரவை எதிர்பார்க்கின்றோம்.
இரத்தினம் பேபி பான்சி
பிரதான சாலை நெல்லியடி.
(சி-11672)




அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
Old Park Restaurant (pvt) Ltd
இல: 40, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
யாழ். வரும் உல்லாசப் பயணிகளின்
இதயம் கவரும் எழில்மிகுந்த
குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி
அனைத்து வசதிகளுடன் கூடிய
நவீன அறைகளும் உணவுடன் கூடிய
போக்குவரத்து வசதிகளும்
சிறந்த முறையில் செய்து
கொடுக்கப்படும்.
0777706461,
தொ.பே, 0112582949,
பக்ஸ்: 0212223790,
0212226890
(சி-11671)


எமது தேசஉறவுகள் அனைவருக்கும் இனிய சித்திரைப் பண்டிகை உரித்தாகுக!
பருத்தித்துறை மண்ணில் நீண்ட காலபாரம்பரியம் கொண்ட
மக்கள் நம்பிக்கையை பெற்ற ஸ்தாபனம்
மஹாலக்ஷ்மி
பஸ்நிலையம் முன்பாக,
பருத்தித்துறை.
(சி-11694)


யாழ் நிலா
நகையகம்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது நண்பர்களுக்கும்
மகிழ்சிக்குரிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
சுன்னாகம் மண்ணில்
மனதை கொள்ளைகொள்ளும் தங்க நகை வடிவமைப்பில்
சிறந்து விளங்கும் யாழ்நிலா நகையகம் அசல் 22 கரட்
தங்கநகைகளை ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து பெற்றுக் கொள்ளலாம்.
யாழ் நிலா நகையகம்
இல: 83, கே.கே.எஸ். வீதி, ராஜா கட்டிடம்.
சுன்னாகம்.
(சி-11695)


தமிழர் தம் தனிச்சிறப்பை எய்தும் பண்டிகையாம் சித்திரை புத்தாண்டு
தனில் நான்னிலமும் வாழும் தமிழ் மக்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.
எம்மிடம் மீன்பிடிஉபகரணங்கள், படகு இயந்திரங்கள்,
படகு இயந்திர உதிரிப்பாகங்கள்
மற்றும் ஏனைய மீன்பிடிக்கு தேவையான பொருட்கள்
அனைத்தையும் ஒரேஇடத்தில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
கடல் மீன்கள் மீன்பிடி உபகரணங்கள்
விற்பனை நிலையம்
சந்தை மேற்கு வீதி, பருத்தித்துறை.
(சி-11696)


கலைவாணி
கலைவாணி கண்ணாடி களஞ்சியத்தின் சார்பில்
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
நெல்லியடியில் முத்திரை பதிக்கும் அனைத்து
பொருட்களுக்குமான மாபெரும் பல்பொருள் அங்காடி
கலைவாணி கண்ணாடி களஞ்சியம்
பிரதான வீதி, நெல்லியடி
(சி-11697)




எமது பாசத்திற்கும் அன்பிற்கும் உரித்துடைய தமிழ் மக்களுக்கு எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அனைவரும் விரும்பிடும்

அமுல் கிறீம் கவுஸ்

இல:452 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:0212225707

(கி-11693)




அனைவருக்கும் உள்ளம் மகிழும்புதுவருட நல்வாழ்த்துக்கள்

மங்கையர் முதல் ஆடவர் வரை விரும்பிடும் ஆப ரணங்களை நவீன டிசைன்களில பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

அம்பிகை நகை மாடம்

நெல்லியடிச் சந்தி, நெல்லியடி. தொ.பே: 0777275331

(கி-11692)




அன்புக்குரிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மிக்சர் தயாரிப்பில் முன்னோடிகள் காரம் இனிப்பு வகைகள் அனைத்து தயாரிப்புக்களையும் தயாரித்து வழங்கும்

அல்பா மிக்சர்

இல: 140 பரமேஸ்வராச் சந்தி, பலாலிவீதி, திருநெல்வேலி. தொ. பே: 0212226695

(கி-11691)




எமது நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

எம்மிடம் அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள் மற்றும் எவர்சில்வர், பிளாஸ்ரிக் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.

அம்பிகை அழகுமாடம்

கே.கே.எஸ் றோட் இணுவில்.

(கி-11690)


நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
கண்ணைக்கவரும் மின்னிடும் தங்கநகைகளுக்கு
நித்தியகல்யாணி நகைமாளிகை
205/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-4590214, 0777-111415
(சி-11494)


சித்திரைப்புத்தாண்டில் எமது நல்வாழ்த்துக்கள்!
இலத்திரனியல் மற்றும் அழகுசாதன அன்பளிப்புப்பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
Dart Enterprise
டாட் என்ரபிறைஸ்
T.P:021-222 3098
021-222 7622
Fax:021-222 3098
இல:11,12 நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
இல:02, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகாமையில்)
(சி-11493)


FedEx Express®
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
WESTERN UNION®
பணம் பரிமாற்றம்
திருமுருகன் கொம் நெற்
Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing,
Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services,
& Computer-Hand phone Accessories,
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835 Fax - 021 222 7836
E.mail :- thirumurugan@lycosmail.com
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310
(சி-11492)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஒரே கூரையின் கீழ்
குளிரூட்டப்பட்டகாட்சியறையில்
உங்கள் உந்துருளி தெரிவுகளுக்கு!
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
நாயகி கட்டடம், பரந்தன், கிளிநொச்சி.
தொ.பே:021-228 5072
(சி-11491)


உங்களின் இக்காலத்தெரிவுக்கு...
மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்..
எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமணமற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங்மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
தொ.பே: 021-228 5971
(சி-11490)


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
பொன்னம்பலம் அரிசி ஆலை
PONNAMPALAM RICE MILL
පොන්නම්පලම් හාල්මෝල
யாழ் சாலை பரந்தன் கிளிநொச்சி
உரிமையாளர்: இராமன், இலட்சுமணன்
தரமான அரிசி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இன்றே
நாடுங்கள்
PRM
தொ.பே: 021-228 5742
பொன்னம்பலம் அரிசி ஆலை
A-9வீதி, பரந்தன் - கிளிநொச்சி
SM graphics
(சி-11489)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
Tilko Holidays (Pvt) Ltd
Hotels and Guest Houses
TILKO
BOUGAINVILLA
GUEST HOUSE
TILKO Holidays
E-mail:-tilkoholidays@yahoo.com
Web Site:- www.tilkoholidays.com
Jaffna City Hotel
70/8, 70/6, K.K.S. Road, Jaffna.
Tel: 021-222 5969, 7291
(சி-11488)
Colombo
Tel: 0112-713803
Trinco
Tel: 026-222 3900


Sanshigaa
JEWEL HOUSE
எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
பார்த்திபவருட
நல்வாழ்த்துக்கள்!
சன்சிகா நகையகம்
සන්ෂිගා ජුවෙල්හවුස්
சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028
யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு -11
(சி-11487)

அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

பாதணி உலகில் மக்கள் நம்பிக்கையை பெற்ற யாழ் காலணியகம் உங்களை அன்போடு அழைக்கின்றது.

நவீன பாதணிகளின் உலகம்!

**யாழ் காலணியகம் பாட்டா ஏஜென்சி**

இல: 11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே: 0212223152

(சி-11759)







APAT GUEST HOUSE நிறுவனத்தின் சார்பில் அனைவருக்கும் எமது தமிழ்ப்புதுவருட வாழ்த்துக்கள்!

யாழ் மண்ணில் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய தங்கும் விடுதி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து வரும் பயணிகளின் வசதிக்கு ஏற்றவகையில்

**APAT GUEST HOUSE**

இல: 43, (75) கண்டி வீதி யாழ்ப்பாணம்.

(சி-11760)

அனைவருக்கும் எம் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

எம்மிடம் பாடசாலை-மாணவருக்கான பாடநூல்கள் உபகரணங்கள் மற்றும் பொது நூல்கள், அழகு சாதனப் பொருட்கள், வாழ்த்து அட்டைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீண்டகாலம் சேவையாற்றிவரும்

**நீயூ அருள் நாயகி புத்தகசாலை**

இல:05, பஸ்நிலையம் அருகில், கொடிகாமம்.

(சி-11761)

அருணா குளிர் களி அகம்
ARUNA CREAM HOUSE
HOSPITAL ROAD MANTHIKAI
ஆஸ்பத்திரி வீதி மந்திகை

மலராக மலர்ந்து வரும் சித்திரைப் புது ஆண்டே உன்னை இன்முகத்துடன் வரவேற்கின்றோம் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மனதை மகிழவைக்கும் கிறீம்கவுஸ் சுவையோ தனி குடித்து மகிழுங்கள்

**அருணா கிறீம் கவுஸ்**

ஆஸ்பத்திரி வீதி, மந்திகை.

(சி-11762)


மயூரா அன்பளிப்பு அகம்
WELCOME
Mayoora Gift
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!
எங்களிடம் அழகு சாதனப் பொருட்கள், பரிசுப்பொருட்கள் எலக்ரோனிக்
எலக்ரிக்கல் சாதனங்கள் அனைத்தையும் ஒரேஇடத்தில் பெற்றுக் கொள்ள
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
மயூரா அன்பளிப்பு அகம்
(சி-11698)
இல:14, நவீன சந்தை வெளிப்புறம், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்


புதிய கஜீபன் நகைமாடம்
NEW KAJEEPAN NAKAI MADAM
கே.கே.எஸ்.வீதி, இணுவில். K.K.S. ROAD INUVIL
அனைவருக்கும் எம் இதயம் கனிந்த
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
தங்கநகை வடிவமைப்பில் சிறந்து விளங்கும் புதிய கஜீபன் நகைமாடத்தார்
22கரட் தங்க நகைகளை உங்களுக்கு வழங்குவதுடன் குறித்த தவணையில்
ஓடரின் பெயரில் பல டிசைன்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
புதிய கஜீபன் நகைமாடம்
கே. கே. எஸ். வீதி, இணுவில்.
(சி-11699)


பிரியங்கா பியூட்டி பலஸ்
வாடிக்கையாளர்கள் நண்பர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
எம்மிடம் அழகு சாதனப் பொருட்கள்
சுவர் மணிக்கூடுகள் ரேடியோ, காலணிகள்
அனைத்தையும் நியாயமான விலைகளில்
ஒரேஇடத்தில் பெற்றுக் கொள்ளலாம்
பிரியங்கா பியூட்டி பலஸ்
பிரதான வீதி, நெல்லியடி.
(சி-11696)


ராஜ் பிறதர்ஸ் எலெக்ரோனிக்ஸ் நிறுவனத்தின் சார்பில் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
எங்களிடம் அனைத்து வகையான எலெரோனிக்ஸ் சாதனங்கள்
நியாயமான விலைகளில் கிடைக்கும்.
ராஜ் பிறதர்ஸ் எலெக்ரோனிக்ஸ்
THIS IS THE APPEARANCE OF CLOSED CAPTIONS.
இல:83 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
SONY
(சி-11697)


asianpaints அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்கள் இல்லங்களை அழகுபடுத்த மனம் கவரும் வர்ணங்களை அள்ளி வழங்குகின்றது.
சர்வதேச ரீதியில் இன்று முன்னணி வகிக்கும் ஏஷியன் பெயின்ற்ஸ்
உங்கள் மனம் கவரும் 1340இற்கும் மேற்பட்ட புதுப்புது வர்ணங்களை
கணினிதொழில்நுட்பம் மூலம் உங்களுக்கு வழங்குகின்றது.
ஏஷியன் பெயின்ற்ஸ் வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
யாழ்ப்பாண இரும்பகம்
இல:32 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 222 7028
PERMOGLAZE DECORA AUTOCARE METACARE
(சி-11663)


கஜமுகன் பென்சிஹவுஸ்
GAJAMUGAN'S FANCY HOUSE
எங்களின் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
எம்மிடம் எலெக்ரோனிக் எலக்றிக்கல் உபகரணங்கள், பரிசுப்பொருட்கள்,
அழகிய வண்ணவிளக்குகள், இல்லத்திரனியல் பொருட்கள் அனைத்தும்
நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
கஜமுகன் பென்சிஹவுஸ்
இல:30 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே:021-2226925
(சி-11663)


கனிகின்ற சித்திரை புத்தாண்டு அமைதியின் ஆண்டாய் நிலைபெற வாழ்த்துகின்றோம்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த புதுவருடவாழ்த்துக்கள்
அழகிய தங்க நகைகளின் ராஜகீரிடம் நவீன டிசைன்கள்
குறித்த தவணைகளில் ஓடரில் வண்ணடிசைன்களில்
தங்கநகை ஆபரணங்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்
மணி ஜீவெல்லறி
இணை
ஈசன் ஜீவெல்லறி
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
பிரதான வீதி, சங்கானை.
(சி-11668)


றொக் நிறுவனத்தின் சார்பில் அனைவருக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.
எங்களிடம் உங்கள் விடுகளுக்கு தேவையான அனைத்துவகை வீட்டுத் தளபாடப் பொருட்களும்
நியாயமான விலைகளில் கிடைக்கும்.
றொக் வீட்டுத் தளபாடம்
கண்டி வீதி சாவகச்சேரி.தொ.பே: 0776362445
(எமது கிளைகள்)
றொக் எலக்றிக்கல் தளபாடநிலையம்
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
ஏஷியன் வீட்டுத் தளபாடம்
மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.
மங்களா
கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
(சி-11669)


குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
நிறுவனத்தினர் தனது வாடிக்கையாளர்கள், வர்த்தகப்பெருமக்கள்,
நண்பர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.
ATS ENGLAND
QUALITY GUARANTEED Automotive and Tractor Spares ATS ENGLAND WORLDWIDE EXPORTERS
LEYLAND
TATA
GOMMA AUTO ELECTRICAL PARTS
டாட்டா, அசோக் லேலண்ட, இசுசு,
டொயாட்டா, சிற்சுபிசி மற்றும்
அனைத்துரக வாகன உதிரிப்பாகங்களும்
குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
M.F. மசி பேர்குசன் 35/ 135 /240
FORD 3000, 3600 – ரைக்டர்களின்
சகலவிதமான உதிரிப் பாகங்களும்,
கலப்பை மற்றும் அதற்கான உதிரிப்பாகங்களும்
முதல்தர இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்
வவுனியா நகரில்
வாகன உதிரிப்பாகங்கள்
விற்பனையில் தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்.
KS குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல: 52, 2ம் குறுக்குத் தெரு, வவுனியா.
T.P: 024-2221845, 024-2221842
நீர் இறைக்கும் இயந்திரம்,
மோட்டார் சைக்கிள், லான்மாஸ்ரர்
ஜெனரேற்றர் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல: 110, பஜார்வீதி, வவுனியா.
T.P: 024-2222475, 024-2222474
TVS MOTOR CO GENUINE PARTS
DID428 ROLLER CHAIN
SM Graphics



உலகம் பரந்து வாழும் எம் தமிழ் மக்களுக்கும், எம்முடைய ஈழத்து உறவுகளுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்.
யாழ், நகரத்துக்கு வரும் அனைவருக்கும்
தங்கும்மிடமாய் அனைத்து
வசதிகளுடன் கூடிய பாதுகாப்பும் நம்பகத்தன்மையுமுள்ள தங்கும் விடுதி
NEW REST HOUSE
இல: 19, சோமசுந்தரம் எவெனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
NEW REST HOUSE
In Front of Human Rights
FOOD LODGING AND CATERING
No 19, Somasuntharam Avenue Chundikuli, Jaffna.
(சி-11688)




Nivean Fancy
நிவேன் பான்ஸி
நிவேன் பான்ஸி சார்பில் அனைவருக்கும் மகிழ்ச்சிக்குரிய தமிழ் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.
சுன்னாகத்தில் தன்நிகரற்று விளங்கும் மகளிர்மனதை கொள்ளை கொள்ளும் அழகு சாதனங்களின் மாடம்.
நிவேன் பான்ஸி
இல:50 டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
(சி-11678)
(சி-11687)




S.G.A நிறுவனத்தின் சார்பில் அனைவருக்கும் எம் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.
யாழ். வரும் உல்லாசப் பயணிகள் தங்கிமகிழ்ந்திட அனைத்து வசதிகளுடன் கூடிய அறைகள் பாதுகாப்பும் நம்பகத்தன்மையும் கொண்ட ஒரே ஸ்தாபனம்
S.G.A தங்கும் விடுதி
GUEST HOUSE
வாடிவீடு
இல: 186. கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-4591359, 0776745595
(சி-11670)




எம் உறவுகள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
எம்மிடம் அனைத்து வகையான பாதணிகளும், பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், புத்தகப்பைகள், வண்ணஅலங்கார கைப்பைகள் அனைத்தையும் ஒரேஇடத்தில் பெற்றுக் கொள்ள கைராசியான கடை
மலர்ஸ் பாதணியகம்
பிரதான வீதி நெல்லியடி.
கதிரவன்ஸ்
இல: 59 பிரதான வீதி நெல்லியடி.
கதிரவன்ஸ்
KATHEIRAVANS
59பிரதானவீதி நெல்லியடி

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

எம்மிடம் கட்டடப் பொருட்கள், எலக்ரிக்கல்,
எலக்ரோனிக் சாதனங்கள்
காஸ் சிலின்டர்கள், PVC பைப்வகைகள்
பெற்றுக்கொள்ளலாம்

# சி. சிவன் ஸ்ரோர்

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
தொ.பே: 0212225900

(சி-11752)

சன் ஸ்ருடியோ ஸ்தாபனத்தார் சார்பில் மகிழ்ச்சிக்குரிய புதுவருட வாழ்த்துக்கள்.

எம்மிடம் கறுப்பு வெள்ளை கலர் படங்கள், மற்றும் படங்களை பெரிதாக்குதல்
திருமணப்பெண் அலங்காரம், படங்களுக்கான பிரேம் போடுதல்அனைத்து வேலைகளும்
சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும்.

# சன் ஸ்ருடியோ அன் வீடியோ

3ம் கட்டை, நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு. யாழ்ப்பாணம்.

0776172625

(சி-11753)




அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

எம்மிடம் மின்சார உபகரணங்கள், மின் அலங்கார
விளக்குகள், மின் மோட்டார்கள், பி.வி.சி பைப் வகைகள்
மலிவான விலைகளில் நீங்கள் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

# செல்வா எலக்ரிக்கல்

இல: 43/01 பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214590524

(சி-11754)

எமது நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இதயம் கனிந்த சித்திரைப்புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்.




இன்றுபோல் என்றும்
உங்கள் நல்வரவை நாடும்

# சிகாஸ் ஹோட்டல்

இல: 460 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

(சி-11755)


எமது அன்புக்குரிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
சிவம்ஸ் SIVAMS Drapery புடவையகம்
குடும்பத்தில் அனைவருக்குமான ஆடைத் தெரிவுகளை
நவீன யுகத்தின் தேவைக்கேற்ற டிசைன்களில் விரும்பிடும்
ஆடைகளை நீங்கள் பெற்றுக் கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்
சிவம்ஸ் புடவையகம்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
(சி-11665)
(சி-11683)


சவேனா ஜுவல்லறி
சவேனா ஜுவல்லறி சார்பில் இனிய
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
SAVENA JEWELLERY
நவநாகரிக உலகின் நவீன நகையகம் பல புதிய டிசைன்களில் ஆபரண நகைகள்
குறித்த நேரத்தில் ஓடரின் பெயரில் விரும்பிடும் நகைகளை செய்து பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்.
சவேனா ஜுவல்லறி
இல:6 உப்புமடம் சந்தி கே.கே.எஸ் வீதி கோண்டாவில்
உரிமையாளர்: கு.வசந்தன்
(சி-11682)


ஊரெழு பாணு பல்பொருள் வாணிபத்தார் சார்பில் ஈழம் தழுவி வாழும்
எம் உறவுகளுக்கும் உலகம் பரந்து வாழும் தமிழ் உறவுகளுக்கும் சித்திரை
புத்தாண்டு வாழ்த்துக்கள்.
து.செல்வரெத்தினம்
பாணு பல்பொருள் வாணிபம்
ஊரெழு வடக்கு ஸ்ரேசன் றோட் சுன்னாகம்
தொ.பே:0777312391
விரைவில் உதயமாகவுள்ள
விஷ்ணு துர்க்கா புதிய சூப்பர் மார்க்கெட்
மோகன் சிவலிங்கம் டோல்ஸ்ராரீஸ் -23
6340 பஜார் சுவிஸ்லாந்து.
(சி-11679)



GREEN PALACE
EMPORIUM
எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
யாழ்நகரில்....
என்றும் மலிவு விலையில்
நிறைந்த ரகங்கள்
நிகரில்லா தரங்கள்
இந்தியா, பாங்கொக், சீனாவின்
ஆடைத்தொழிற்சாலைகளில்
இருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்பட்டபெயர் பெற்ற
ஆடைத்தெரிவுகளுக்கு...
கிறீன் பலஸ்
எம்போறியம்
பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி,
திருநெல்வேலி.
எமது நிறுவனத்தில் குறிப்பிட்ட
தொகைக்குமேல் கொள்வனவு
செய்யும் ஒவ்வொரு
வாடிக்கையாளர்களுக்கும்
இன்றிலிருந்து அன்றாட
வீட்டுப்பாவனைக்குரிய
இலத்திரனியல் பொருள்
இலவசமாக வழங்கப்படும்.
SM Graphics
(சி-11706)




கோஸ்வே பெயின்ட் பாவனையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சர்வதேச விருது பெற்ற
ஒரே பெயின்ட்*
கோஸ்வே பெயின்ட்*
Golden Europe Award for Quality-New Millennium Award-2003 (France)
Golden Asia Award for Excellence-New Millennium Award-2002 (Hong Kong)
NCE Export Bronze Award 2003
DEBEER
CAUSEWAY Sunny HI-BUILD LACQUER
KENLUX
LUXURY SHIELD
வீட்டுக்கு
வெளிச்சம்
வாழ்க்கைக்கு
சுபீட்சம்
C.P.T.
CAUSEWAY PAINTS
Tel: (038) 2240040-5 (038) 2243166-9 Fax: (038) 2240046
E-mail: causeway@sltnet.lk Website: www.causewaypaints.com
(சி-11706)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்.

சுபமுகூர்த்த பட்டுப் புடைவைகள்
கூறைச் சேலைகள்
பட்டு வேட்டிகளுக்கு

யாழ்நகரில் கைராசியான நிறுவனம்



# சீமாட்டி புடைவைக்கடல்

இல: 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2222196

(சி-11723)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

Multilac www.multilac.com

ISO 9001-2000 சர்வதேச தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




வடபகுதிக்கான ஏக விநியோகஸ்தர்கள்

# கந்தவேலன் ரேடர்ஸ்

இல-110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P-021-222 2822

சரியான வழியின் முன்னோடி




(சி-11720)

வாடிக்கையாளர்கள்அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப்பெற்றிட.......
முக அமைப்பிற்கேற்ப சங்குப்பற்களைப் பொருத்திட....
மிதப்புப்பற்களுக்குக் கிளிப் பொருத்திக் கொள்ள
கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.

# எரிக்கணேஷ்

பல்கட்டும் இடமும்
மூக்குக் கண்ணாடி
அகமும்



கிளைகள்:
சுன்னாகம்,
கொக்குவில் சந்தி.

564,566. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-11721)

இன்று பிறந்துள்ள புத்தாண்டில் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.



MD-90 மற்றும் றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், பற்றரி வகைகள் அசிட் வகைகள், சோலர் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

இல-108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.




# அருள் விநாயகர் றேடர்ஸ்



இல-106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-11722)

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!


தேனீர் கடை உரிமையாளர்களே!
அரிசி அரைக்கும் ஆலை உரிமையாளர்களே! உங்களுக்கோர் நற்செய்தி!

அரிசி, மிளகாய், உழுந்து, கோப்பி என்பனவற்றை தேவைக்கேற்ப மிருதுவாக அரைப்பதற்கு ஏற்ற உலகப்பிரசித்திபெற்ற இயந்திரங்களான கெனடி, நவின், அமுதா பிறாண்டுகள்.

நெல் குற்றுவதற்கான இயந்திரங்கள் ஒரு நாளுக்கு 3 தொன் வரை குற்றக் கூடியது இயந்திரங்கள் தரம் மிக்க தொழில் நுட்ப வல்லுனர்களைக் கொண்டு பொருத்தி தரமிக்க அரிசியை உற்பத்தி செய்து தருவோம்.

ஈர அரிசி அரைக்கும் இயந்திரங்கள், பட்டி வகைகள் கிறைண்டர் பிளேட் வகைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும் சகாய விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

வசதிகுறைந்தவர்களுக்கு 60% வரையான வங்கிக்கடன் அல்லது இலகு தவணைமுறையில் செலுத்தக் கூடிய வசதிகள் செய்து தரப்படும்.



நவின், கெனடி, அமுதா றெக்ஸ் பிறாண்ட் இயந்திரங்களின் இலங்கைக்கான ஏகஇறக்குமதியாளரும் விநியோகஸ்தரும் நாங்களே!

# சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்

117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-2222938

ஆல்சிலோன் டிஸ்ரி பியூட்டஸ் இன் வைஸ்மன் லிமிட்டட்

இல: 2, செல்லூசியா வீதி, கொழும்பு-12 தொ.பே: 011-2434674




(சி-11724)

**கடந்த** டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சுனாமிப் பேரலைகள் காரணமாக எமது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள கொடூர அனுபவம்- உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள் மிகவும் பெரியவை. இவற்றால் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துயரங்களில் சிக்கித்தவிக்கும் மக்களிடம் இருந்து எமக்குக் கிடைத்திருக்கும் விடயங்களை இங்கே தருகிறோம்.

டிசம்பர் 27,28,29 ஆம் திகதிகளில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மக்கள் இவர்களுக்கு உடை, உணவு, பொருள்பண்டங்கள் யாவற்றையும் இனம்,மதம், குல பேதங்களைப் பார்க்காமல் உதவினார்கள். இன்னும் அநேகமானோர்கள் தங்களால் இயன்ற சரீர உதவிகளையும் செய்தார்கள். அதாவது கட்டட இடிபாடுகளை அகற்றி காயப்பட்டவர்களை மீட்டார்கள். இறந்தவர்களின் சடலங்களையும் அகற்றினார்கள். வெளிநாடுகளில் இருந்து உதவிகள் கிடைக்கும் முன் இவர்கள் இப்பணிகளைச் செய்து முடித்தார்கள். அன்று விசேசமாக மக்கள் தம் குரோதங்களை மறந்து செயற்பட்டதால் இனமோதல்கள் யாவும் அடங்கிப்போயின. எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவிகள் செய்து வருவதாக சகல ஊடகங்களும், தொலைக்காட்சிகளும் செய்திகளை வெளியிட்டன. பரம வைரிகளாக இருந்த விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் உதவிகளைப் புரிந்துகொண்டனர். விடுதலைப்புலிகள் இராணுவத்தைக் காப்பாற்றியதுடன் இராணுவமும் விடுதலைப்புலிகளைக் காப்பாற்றியுள்ளது.

இது யுத்தநிறுத்தத்திற்கு நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தது. ஆனால் இவற்றினால் ஏற்படக்கூடிய பயன்களை பெறுவதற்கு எம்மால் முடியாமல் போயிற்று. இதற்கு அரசாங்கத்தில் ஏற்பட்டிருக்கும் பலவீனம் முதல் காரணமாக அமைந்துள்ளது. சுனாமி பேரழிவினால் ஏற்பட்ட ஒற்றுமை தற்பொழுது மெதுவாக மறைந்த வண்ணம் உள்ளது.

மக்களுக்கு உதவுவதில் சர்வதேச சமூகம் முழுமூச்சுடன் ஈடுபட்டது. அமெரிக்கா முதலில் சிறுநிவாரணங்களை வழங்குவதற்கு முன்வந்தது. ஆனால் அங்குள்ள மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க நிவாரணங்களை அதிகரித்தது. அங்குள்ள பொது மக்கள் அதிக நிதியைத் திரட்டி இங்கு அனுப்பினர். பிரித்தானிய மக்களும் அதிக நிதியைத் திரட்டி இங்கு அனுப்பினர்.

மக்களால் திரட்டப்பட்ட நிதி வந்து கிடைத்தாலும் அரசுகளால் வழங்கப்படுவதாக உறுதி அளிக்கப்பட்ட நிதி இன்னும் இங்கு வந்து சேரவில்லை.

இதேபோல் பல வருடங்களுக்கு முன் ஈரானில் ஏற்பட்ட பூமி அதிர்வினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். கோடிக்கணக்கான உடமைகள் அழிந்தவேளையில் சர்வதேச நாடுகள் அதிக நிதியை வழங்கப் போவதாக அறிவித்தும் கடைசியில் நூற்றுக்கு இரண்டு சத வீத உதவிகள் மட்டும் ஈரானுக்குக் கிடைத்தது. அதேகதிதான் எமது நாட்டுக்கும் நடக்கும். நிவாரண உதவி கள் தாமதப்படுத்துவதற்கும் பல காரணங்கள் உள்ளன. சுனாமி பேரழிவுகளுக்காக வழங்கப்படும் நிதியை வேறு தேவைகளுக்கு அரசு பயன்படுத்தப்போவதாக சர்வதேச நாடுகள் கணிப்பீடு செய்திருக்கலாம். அதில் உண்மையும் உண்டு.

சுனாமி நிவாரணப்பணிகளுக்கு சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள குழுவிலுள்ளோர் இவ்வேலைகளைப் பற்றி அனுபவம் இல்லாதவர்கள் எனத் தற்பொழுது தெரிய வந்துள்ளது. இதில் அநேகமானோர் உயர்தர வர்க்கத்தின் வணிக நடவடிக்கைகளில் மிக அக்கறையுடன் செயற்படுபவர்கள் என தற்பொழுது குற்றச்சாட்டுக் கிளம்பியுள்ளது. இக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் வாதிகள், பாதிக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அப்படிப்பட்ட குழுவிற்கு நிவாரணப் பணிகளை ஒப்படைத்திருப்பதால் அவர்கள் தமது கடமைகளில் இருந்து விலகியே எப்போதும் செயற்படுவார்கள். இதனால் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு தமது வேலைத்திட்டங்களை முழுமையாகச் செயற்படுத்துமென நம்ப முடியாது.

மற்றது நூறு மீற்றர் தடை செய்யப்பட்ட பிரதேசம் சம்பந்தப்பட்ட சட்டமும் சர்ச்சைக்குரியதாகியுள்ளது. கடற்கரை அருகில் வீடுகளை அமைப்பது மக்களுக்குப் பாதுகாப்பு குறைவு என அரசு அறிவித்துள்ளது. இதை சில மக்கள் வரவேற்கின்றனர். பொதுவாக சுனாமி பேரனர்த்தம் எல்லா இடங்களிலும் ஏற்படவில்லை. எனவே பாதிப்புக்கு உள்ளாகாதவர்கள் இச்சட்டத்தை எதிர்க்கின்றனர்.

எனவே இதனை நடைமுறைப்படுத்துவது கஸ்டமான காரியம் என சர்வதேச சுனாமி பரிசோதனைக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இச்சட்டம் 1800 ஆம் ஆண்டு காலங்களில் பிரித்தானிய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட வரண்டபிரதேச காணிச் சட்டங்களுக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் ஏனைய நிலங்கள் யாவும் வான் பயிர்களும் விவசாயம் செய்வதற்கு உகந்ததென சிபார்சு செய்யப்பட்டதின் விளைவுதான் இன்றும் எம்மை ஆட்டிப்படைக்கிறது. கடற்கரைப் பாதுகாப்புச் சட்டங்கள் இதுவரை அமுல் படுத்தப்படவில்லை. உல்லாசப் பிரயாணங்களின் ஹோட்டல்கள் இங்கு அமைக்கப்பட்டு அரசு வருமானத்தை எதிர்பார்த்தபடியால் பொது மக்களை கடற்கரைப் பிரதேசங்களில் இருந்து அகற்றி மீண்டும் ஹோட்டல்களை கடற்கரையில் அமைப்பதை மக்கள் விரும்பமாட்டார்கள். ஆகையால் அரசாங்கம் மக்களுக்கு வீடுகள் அமைக்கும் போதும் கடல் எல்லைக்குள் நிர்மாணிக்க வேண்டி வரும். இதுவரைக்கும் இது சம்பந்தமாக முறையான திட்டங்களை அரசு அறிவிக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அங்குள்ள பாதிப்படைந்த மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் பாதிப்புக்களை சமாளிப்பது எப்படி? என்பதை தீர்மானிப்பதற்கு பாதிக்கப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு அதிகாரங்களை வழங்கி அவர்கள் மூலம் பொது மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும். ஆனால் இதுவரை அரசாங்கம் அதைச் செய்யவில்லை. ஆனபடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பது மற்றும் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் சுகாதார பிரச்சினைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இது குறித்து மக்களைக் கலந்தாலோசிக்காமல் அரசாங்கத்தின் திட்டங்களை செயற்படுத்த முற்பட்டால் அது தோல்வியில் முடியும். பாதிக்கப்பட்டவர்களை இணைத்துக்கொண்டு அவர்களுக்கு குடியிருப்புக்களைக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும். இதற்காக சிக்கலான காணிப் பிரச்சினைகளுக்கு முதலில் பரிகாரம் காண வேண்டும்.

சுனாமி பேரழிவுகளை பயன்படுத்தி அரசாங்கம் தனது திட்டங்களை நியாயப்படுத்துவதற்கு முற்படுமானால் மக்களின் எதிர்ப்பை அரசாங்கம் சம்பாதிக்க வேண்டி வரும். இடைநிறுத்தப்பட்ட வடிகால் அமைப்புத் திட்டங்கள் எப்பாவெல பொஸ்பேட் நிறுவனம் தனியார் மயமாக்குதல் ஐக்கிய தேசியக் கட்சியினரால் அமுல் படுத்தப்பட்ட திட்டங்களாகும். மீண்டும் இவ்வாறான வேலைத்திட்டங்களை தற்போதைய அரசு சுனாமியை பயன்படுத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

இவற்றை இந்நாட்டில் மீண்டும் செயற்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம் எனக் கூறி இவர்கள் பதவிக்கு வந்துள்ளனர். ஆனால் இவற்றை மீண்டும் இவர்கள் செயற்படுத்துவதற்கு முயற்சித்தால் நிச்சயமாக இவர்கள் பதவி விலக வேண்டி வரும். வடக்கு கிழக்கை இணைத்து சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகளை மேற்கொள்வது சம்பந்தமாக தற்பொழுது பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற வண்ணம் உள்ளதாக அறிகிறோம் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ளதை நாங்கள் வரவேற்கிறோம்.

அவ்வாறு இணக்கம் ஏற்பட்டால் விடுதலைப்புலிகளும் அரசும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டி வரும். இந்தச் செயற்திட்டத்திற்கு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இதனால் வடகிழக்கு மக்கள் முகம் கொடுத்துள்ள நீண்டநாள் பிரச்சினைகள் தீர வாய்ப்பு ஏற்படும்.

எனவே அரசாங்கம் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து இந்த சுனாமி பேரழிவுக்கும் மற்றும் வடகிழக்கு பிரச்சினைக்கும் முடிவு கட்டுவதற்கு முன்வர வேண்டும். சுனாமி அனர்த்தத்தை முன்வைத்து அரசியல் இலாபம் தேடுபவர்களை சகல பொதுமக்களும் நிராகரிக்க வேண்டும்.




# அரசு மீது சர்வதேசம் கொண்டுள்ள சந்தேகத்தால் சுனாமி நிவாரண நிதி கிடைக்காது போகும் அபாயம்

சுனாமி அழிவின் பொழுது இந்தியாவும் இலங்கையும் செயற்பட்ட விதத்தில் மாற்றங்கள் உள்ளன. வெளிநாட்டு உதவிகள் தேவைப்படாதென இந்தியா அறிவித்தது. இந்தியா பெரிய நாடு. ஆகவே அங்கு ஏற்பட்ட அனர்த்தம் நாட்டைப் பாதிக்கவில்லை.

ஆனால் இலங்கை வெளிநாடுக்ளிலிருந்து உதவிகளைக் கோரியது. பொதுவாக வெளிநாடுகளில் இருந்து இங்கு படைகள் வருவதை எமது மக்கள் விரும்ப மாட்டார்கள் அப்படி இருந்தும் அரசாங்கம் நிவாரணப்பணிகளுக்கு அமெரிக்காவின் இராணுவ உதவியைக் கோரியது. ஆனால் இதற்கு விடுதலைப்புலிகளோ அல்லது ஜே.வி.பியோ எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இம்மாதிரியான அனர்த்தங்கள் ஏற்படும் பொழுது உதவிகள் செய்வதற்கு அமெரிக்காவில் பயிற்றுவித்த பொதுக்குழு உள்ளது. இந்நிலையில் அமெரிக்காவில் இருந்து நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கு வருகை தந்த இராணுவம் இங்கே நீடித்து நிலை கொள் வதற்கு நியாயம் இல்லை. இலங்கையில் சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட

லங்காதீப சிங்கள நாளிதழ்
பேராசிரியர் சிறியானந்த
மொழியாக்கம் அ.சக்திவேல்

---

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னை கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுத்த தீர்மானம் சட்டவிரோத மானதெனக் கூறி குசைன்பைலா உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

குசைன்பைலா தாக்கல செய்துள்ள இந்த வழக்கின் மனுவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூக்ஹக்கீம் உட்பட எட்டு பேரின் பெயர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளது.

குசைன்பைலா அந்த மனுவில் குறிப்பிடுகையில் தன்னிடம் விளக்கம் கோராமல் பாராளுமன்றப் பதவியை இல்லாமல் செய்வதற்கு பிரதிவாதிகள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதனால முஸ்லிம் காங்கிரசினால் தனது பாராளுமன்றப் பதவியை இல்லாமல் செய்ய முடியாதெனக்கூறிய குசைன் பைலா இந்தத் தீர்மானத்தை சட்ட விரோதமானது என அறிவிக்குமாறும் உச்ச நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுததுள்ளார்.

## மரணதண்டனையை நீக்கும்படி சவுதியிடம் சந்திரிகா கோருவார்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று இலங்கையர்களின் தண்டனையை நீக்குவது தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி மூலம் கோரிக்கை முன்வைப்பது குறித்து வெளிவிவகார அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது. அடுத்த சில தினங்களில் இக்கோரிக்கை விடுக்கப்படவிருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தகவல் தெரிவித்துள்ளார். தண்டனைக்கு உள்ளானவர்களின் குடும்பங்கள் ஊடாகவும் இவ் வேண்டுகோள் விடுக்கப்படவிருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ்

## தமிழ்ப்பாட உதவிக்கல்விப்பணிப்பாளராக சேவையாற்றி 13.04.2005 இல் ஓய்வு பெறும் திருமதி. இராஜலட்சுமி சந்திரபாலன் அவர்களின் சேவை நலன் பாராட்டு

கல்வித்துறையில் மூன்று தசாப்தங்களாக கலங்கரை விளக்காய் ஒளிவீசிய திருமதி. இராஜலட்சுமி- சந்திரபாலன் 13.04.2005 நேற்றுடன் ஓய்வு பெறுகிறார்.

14.04.1947 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி யிலும், க.பொ.த (உ/த) கல்வியை யாழ்ப்பாணம் இராம நாதன் மகளிர் கல்லூரியிலும் கற்று தனது பட்டப்படிப்பை கொழும்புப் பல கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கற்று தமிழில் சிறப்புக்கலைப்பட்ட தாரியானார்.

1975 இல் முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியில் பகுதிநேர ஆசிரியராகச்சேர்ந்து 1.11.1976 இல் அக்கல்லூரியிலே பட்டதாரி ஆசிரியராக நியமனமும் பெற்றார்.

அன்றில் இருந்து வித்தியானந்தாவின் உயிர் மூச்சாக இயங்கியவர் வித்தியானந்தாக் கல்லூரியின் பொற்காலத்தை சிருஷ்டித்த சிற்பிகளில் இவரும் ஒருவர் "மிஸ்" . என்றால் சந்திரபாலன் மிஸ் என்று கருதப் படுமளவுக்கு தனது வாழ்வை வித்தியானந்தாக் கல்லூரியின் எழிச்சிக்காக அர்ப்பணித்தவர்.கண்டிப்பும் இரக்கமும் அவரது இரண்டு பக்கங்களாக இருந்தன "மிஸ் திரும்பிப் பார்த்தால் போதும் அசெம்பிளியில் குண்டூசி விழுந்தால் கூட கேட்கின்ற அமைதி நிலவும" என்று இன்றும் அவரிடம் கற்று மாணவர்கள் அந்தக்காலத்தை நினைவு கூர்வதுண்டு.



திருமதி.இராஜலட்சுமி-சந்திரபாலன்

ஒருகாலத்தில் வித்தியானந்தாவின் கலைப்பிரிவு மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தை ஆக்கிரமிகின்ற அளவுக்கு தனது சீரிய செயற்திறனால் அப்பிரிவை வழிநடத்தியவர் இன்று யாழ்பல்கலைக்கழகத்தை அலங்கரிக்கும் முல்லைத்தீவின் மைந்தர்களான விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்கள் சத்திரபாலன் மிஸ்ஸின் வகுப்றையில் புடம் போடப்பட்டவர்கள் தான் பேச்சுப் போட்டிக்கு பழக்குவதன் மூலமும், நாவலர் விழாக் கொண்டாடுவதன் மூலமும் பரீட்சை பெறுபேறை எவ்வாறு உயர்த்தலாம் என்பது அவருக்கு மடடுமே தெரிந்த இரகசியம் அந்தளவுக்கு இணைபாட விதானங்களுடாக கற்பித்தலை மேற்கொளகின்ற நிபுணத்துவம் அவருக்கிருந்தது தமிழில் துறைபோன புலமையும் தாயாகி மாணவரின் அறிவுப்பசியகற்றும் மனப்பாங்கும் அவருடைய தனித்துவங்கள்.

சந்திரபாலன் மிஸ் ஒழுக்கத்துக்குப் பொறுப்பாக இருந்தகாலம் பாடசாலையின் ஒரு உன்னதமான காலம் "தங்கராஜர் யுகத்தில" ஒருபுறம் "கட்டைப் பாலசிங்கம் சேர்" என்று அழைக்கப்பட்ட பாலசிங்கம் ஆசிரியரும் மறுபுறம் சந்திரபாலன் மிஸ்சும் ஒரு வாளின் "இருபக்கக் கூர்முனைகளாக" ஒழுக்கத்தைக் கட்டிக்காத்த அந்த நாட்கள் உண்மையிலேயே அற்புதமானவை பாடசாலை விடுகின்ற மணி அடித்ததும் கடைசிப் பெண்பிள்ளையும் பாடசாலையை விடடு வெளியேறிய பின்னர்தான் "மிஸ்" "ஹான் பாக்"கை எடுப்பா அதே போன்று சுற்றுலா என்றால் என்ன, விளையாட்டுப் போடடி என்றால் என்ன ஒரு பாடசாலை பெண்பிள்ளை அந்த இடத்தில் நின்றால் சந்திரபாலன் மிஸ்சும் நிற்பா என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம் அந்தளவுக்கு தனது பொறுப்பை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றியவர்.

அதிபர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியிலாளர்கள் எனப் பல பதவிகளை அலங்கரிக்கும் வித்தியானந்தாவின் மைந்தர்களில் பெரும்பாலானவர்கள் சந்திரபாலன் மிஸ்சிடம் தமிழ் படித்தவர்கள் குறைந்தது "பேச்சாவது" வாங்கியவர்கள் தான் அந்தளவுக்கு உயர்தர வகுப்புகளில் மட்டுமல்ல க.பொ.த சாதாரண தர வகுப்புக்களிலும் தமிழ் கற்பித்து மாணவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தியவர். இவ்வாறு நிழல் தந்த இந்த விருட்சம் வாழ்வில் பல புயல்களை சந்தித்திருக்கின்றது ஆனால் எந்தப்புயலுமே அதன் ஆணிவேரை அசைத்துவிடவில்லை அது தன்னை நாடி வந்தோருக்கு நிழல் கொடுப்பதை தடுத்து விடவில்லை.

சந்திரபாலன் மிஸ் 15.01.1991 இல் வித்தியானந்தாக் கல்லூரியின் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார் பதவிகள் சிலரை அலங்கரிக்கும், சிலர் பதவிகளை அங்கரிப்பர் இதில் சந்திராபலன் மிஸ் இரண்டாவது வகைக்குள் அடங்குவார் பிரதி அதிபர் பதவி வித்தியானந்தாக் கல்லூரியின் பிரதி அதிபர் பதவி எவ்வளவு பொறுப்பு வாய்ந்தது என்பதை அந்த நாட்களில் அவரிடம் கற்று நாங்கள் இன்றும் நினைத்துப் பார்க்கின்றோம். பிரதி அதிபர் பதவியை பாடங்களில் இருந்து விடுபட வாய்த்த ஒரு பதவியாகக் கருதாமல் நிர்வாகக் கடமைகளுக்கு சமாந்தரமாக கற்பித்தலையும் முன்னெடுத்துச் சென்றவர் சந்திரபாலன் மிஸ் கதிரைக்காக பணிபுரியாமல் பணி புரிவதற்காக கதிரையைப் பயன்படுத்தியவர்.

இவ்வாறு வித்தியானந்தாவுக்கு ஒளியூட்டிய இந்த அறிவுத்தீபம் 01.02.1994 இல் ஆசிரிய ஆலோசகராக மாவட்டத்திற்கு அறிவொளி பரப்ப விளைந்தாது 01.12.1998 இல் முல்லை வலயத்தின் தமிழ் உதவிக்கல்விப்பணிப்பாளராக அவர் பதவியுயர்வு பெற்றபோது முல்லைத்தீவு கல்வி வலயமே அகமகிழ்ந்தது சொன்னதை செய்து முடிக்கும் மாணவர் படை யொன்று அவருக்கிருந்ததால் உதவிக் கல்விப்பணிப் பாளர் பதவி அவருக்கு சிரமத்தைக் கொடுக்கவில்லை ஒரு நல்ல ஆசிரியரிடம் கடைசியாக எஞ்சியிருப்பது விசுவாசமுள்ள மாணவர் கள் தான் என்பது அவருக்கு நூற்றுக்கு நூறு வீதம் பொருத் தமானதே அதனால் தமிழ்த்தினப் போட்டி போன்ற போட்டிகளையும் பாடசாலை மேற்பார்வையையும் செய்வது அவருக்கு மிக இலகுவாக இருந்தது எந்த நிகழ்வு என்றாலும் குறித்த நேரத்துக்கு முன்னால் சென்று தனது பொறுப்பை திறம்படச் செய்யும் அவரது பண்பு அவரது பணிக்கு சிகரமிட்டது. உதவிக்கல்விப்பணிப்பாளராக செயற்பட்ட காலத்திலும் கற்பித்தலை "மிஸ்" கைவிடவில்லை தனது உடலை சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து உயர்தர வகுப்புக்களுக்கு கருத்தரங்குகள் (Saminars) எடுத்ததன் விளைவு அவரது குரல் நாண்கள் தளர்ந்து போயின.

அதனால்....

இந்தப்பிரதேசத்துக்கே குரல் தந்த ஒரு அறிவுக்கடல் இன்று குரல் அடைத்துப்போய் தனது ஓய்வுக்குரிய காலத்துக்கு இரண்டு ஆண்டுகளின் முன்னரே ஓய்வெடுத்துக் கொள்கிறது.

எனினும், புயல்கள் அவருக்கு புதியவையல்ல எந்த வேதனையும் அவரை வீழ்த்திவிட்டதில்லை என்பது அவரின் கடந்தகால வரலாறு அதை எதிர்காலமும் மெய்ப்பிக்கும் என்று நாம் நம்புகிறோம் சிகிச்சை பயனளித்து அவர் குரல் மீண்டும் திரும்பும் அவர் தமிழ் மீண்டும் எம் மாணவர்க்குப் பயன்படும் என்று நம்புவோம் அதற்காக பிரார்ததிப்போம் ஓய்விலும் உற்சாகமாக வாழ வாழ்த்துவோம்.

பழைய மாணவர்கள்,
மு/வித்தியானந்தாக்கல்லூரி,
முள்ளியவளை.

(சி.5828)

## எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

# எரிபொருள் உதிரிகள் வாணிபம்

- உந்துருளி உதிரிப்பாகங்கள்
- உழவு இயந்திர உதிரிப்பாகங்கள்
- நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
- மின்சார உபகரணங்கள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும்

உங்கள் பாவனையிலுள்ள சகலவிதமான வாகனங்களையும் சுத்திகரிப்பு செய்யவும்.

இன்றே நாடுங்கள்






## மருதநிலம் ஊர்தி சுத்திகரிப்பு நிலையம்

**பிரதான வீதி, அக்கராயன், ஸ்கந்தபுரம்**

(சி.11771)



## அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# வொய்ஸ் எலக்ரோனிக்

விநியோகஸ்தர்கள் -ரி.வி.ரேடியோ இயந்திரப் பாகங்களும், எலக்ரோனிக் வகைகள்

67,1ஆவது தளம், புதிய பேருந்து நிலையம்,
வவுனியா.

(11772)


## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்


## செல்லையா சிவசாமி

கிளிநொச்சி வர்த்தகர் சங்கத்தின் முன்னை நாள் தலைவரும், கிளிநொச்சி லலிதா பல்வகை வாணிப உரிமையாளரும், திரு. சி.சிவகுமார் அவர்களின் தந்தையுமான செல்லையா சிவசாமி அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

வர்த்தகர் சங்கம்
கிளிநொச்சி

(சி.11638)

## சாவு அறிவித்தல்



அமரர்

## திரு. கோவிந்தன் முத்து

கிளிநொச்சி 4–ஆம் வாய்க்கால் மருதநகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கோவிந்தன் முத்து அவர்கள் 13/04/2005 இயற்கை எய்தினார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சாந்தி (வவுனியா), வசந்தி (வவுனியா), நந்தினி (லண்டன்), காந்தன் (சவுதி), நந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தன் (ஐயப்பா ரேடஸ் வவுனியா காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, சிறி (லண்டன்), காயா (வவுனியா), கவிதா (திருமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நந்தன் - மகன்

(5993)

## சாவு அறிவித்தல்



அமரர்

## திரு.செல்லையா சிவசாமி

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,கொழும்பு மருதானையினை வசிப்பிடமாகவும், வவுனியா நெலுக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தொழிலதிபரும் சமாதான நீதவானுமாகிய கலாநிதி திரு. செல்லையா சிவசாமி (உரிமையாளர் லலிதா றேடிங்கம்பனி கிளிநொச்சி,சிவசாமி அன் கம்பனி கொழும்பு, ராங்வியூ கோட்டல் கிளிநொச்சி) அவர்கள் 12.04.2005 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.


அன்னார் காலம் சென்ற செல்லையா,செல்லம்மா (கனடா) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், லலிதாம்பிகையின் அன்புக் கணவரும், திலகவதி (கனடா), நடனசபாபதி (கனடா), இராஜசிங்கம் (எயாலைன் ரேடஸ் கொழும்பு), காலம் சென்ற மங்கயற்கரசி,தவமணிதேவி (கனடா), ஞானசீலன் (கனடா), குணசீலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரிமளபாவானி (கனடா),செல்வகுமார் (சுவின் எக்சிட் கம்பனி), சிவகுமார்((லலிதா பல்பொருள் வாணிபம்),தமிழ்ச்செல்வி (லண்டன்), லலித்குமார் (பழைய மாணவன் கொழும்பு றோயல் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராஜா (கனடா), சசிகலா கொழும்பு), இரஞ்சலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,அருணன் (கனடா),அற்புதன்(கனடா), கீர்த்திகா (கனடா),ஷேஷான் (கொழும்பு), சுபானு (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரலை ஜயவர்த்தன் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 17.04.2005 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
சிவசாமி சிவகுமார் (மகன்)

(5994)

## ராவிட் தலைவர்;பதான்நீக்கம் சிறிராம், கும்ளே இணைப்பு



கங்குலிக்கு ஆறு ஆட்டங்களில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளதை யடுத்து பாகிஸ்தானுடனான மீதமுள்ள இரண்டு ஆட்டங்களுக்கு ராகுல் ராவிட் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அணியில் சுழற் பந்து வீச்சாளர் அனில் கும்ளே,சகலதுறைவீரர் ஸ்ரீராம் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். டெஸ்ட் ஆட்டங்களிலும் ஒருநாள் ஆட்டங்களிலும் சரியாகப் பந்துவீசாத இர்பான்பதான் நீக்கப் பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இணைச்செயலர் கௌதம்தாஸ் குப்தா நிருபர்களிடம் இத் தகவலைத் தெரிவித்தார்.

இந்திய அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் அணித்தலைவர் என்ற முறையில் கங்குலிக்குத் தடை விதிக்கப்பட்டது. அவர் இத் தொடரில் மீதமுள்ள இரு ஆட்டங்களிலும் விளையாடமாட்டார். ஏற்கெனவே மோசமான நிலையில் இருக்கும் அவருக்கு மற்றொரு பிரச்சினையாக இது அமைந்துள்ளது.

மீதமுள்ள இரண்டு ஆட்டங்களில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட இந்திய அணி விபரம்: ராகுல்ராவிட் (தலைவர்) சச்சின் டெண்டுல்கர், சேவாக், எம்.எஸ்.டோனி, யுவராஜ்சிங், முகமது கை.'.ப், தினேஷ் மோங்கியா, ஸ்ரீராம், அனில் கும்ளே, ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக், ஆஷிஸ் நெஹ்ரா, எல். பாலாஜி, சாகீர்கான், அஜீத் அகர்கர்.

## வீரர்களின் கூட்டு முயற்சியே வெற்றிக்குக் காரணம் - இன்சமாம்



எனது சிறந்த ஆட்டம் இது என்று சொல்லமாட்டேன். எனது பங்கு சிறிய அளிவிலேயே இருந்தது. அப்ரிடி, அப்துல்ரசாக்,சல்மான்பட்,சோயிப்மலிக் ஆகியோரது ஆட்டம் சிறப்பாக இருந்தது. வீரர்களின் கூட்டு முயற்சியே வெற்றிக்குக் காரணம். அனைவரும் சிறப்பாக விளையாடியதால் 316 ஓட்ட இலக்கை எட்ட முடிந்தது என்கிறார் பாக். அணித் தலைவர் இன்சமாம்.

தொடக்கத்தில் அப்ரிடி அதிரடியாக ஆடியதால் ஓட்ட விகிதம் அதிகமாக இருந்தது. அதற்குப் பிறகு வந்த வீரர்கள் விக்கெட் விழாமல் ஓட்ட விக்கெட்டைத் தக்கவைத்தனர். இதனால் எந்தக் கட்டத்திலும் அடித்து ஆட வேண்டிய நெருக்கடி ஏற்படவில்லை.

ஒவ்வொரு ஆட்டமும் வித்தியாசமானது. அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் புதிய திட்டம் வைத்து சிறப்பாக ஆடுவோம் இவ்வாறு இன்சமாம் கூறினார்.

தோல்வி குறித்து அடுத்த இரண்டு போட்டியில் தலைவராக இருக்கும் ராவிட் கூறியதாவது;மாலிக்-ரசாக் ஜோடியைப் பிரிக்க முடியாமல் போனது தோல்விக்கு முக்கிய காரணம். மிடில் ஓடரில் எந்தவித நெருக்கடியும் கொடுக்கவில்லை. அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெறப் போராடுவோம் என்றார்.


## கங்குலியின் தடைக்கு ஐ.சி.சி. விளக்கம்



கங்குலிக்கு ஆறு ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஐ.சி.சி கூறியதாவது; கடந்த ஒரு ஆண்டில் இரண்டு முறை இந்தத் தவறு நடந்துள்ளது. இதனால் விதிப்படி தான் ஆறு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது கடுமையான நடவடிக்கை இல்லை. இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.





## லோவின்சன்ட் இரட்டைச் சதம்; வலு!வான நிலையில் நியூசிலாந்து



நியூசிலாந்து துடுப்பாட்ட வீரரான லோவின்சன்ட் எடுத்த இரட்டை சதத்தின் மூலம் சிறிலங்காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் அவ்வணி வலுவான நிலையை அடைந்துள்ளது.

மூன்றாம் நாளான நேற்றுக்காலை நான்கு விக்கெட் இழப்பிற்கு 253 என்ற ஓட்டங்களுடன் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து மதியபோசன இடைவேளையின்போது மேலும் இரண்டு விக்கெட்டுக்களையிழந்தது. எனினும் லோவின்சன்ட் மறுபுறத்தில் சிறப்பாக ஆடினார். தேநீர் இடைவேளையின் பின் அவர் நான்கு சிக்ஸர், 25 பவுண்டரிகள் உட்பட பெற்று 224 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். அவர் ஆட்டமிழந்ததையடுத்து ஒன்பது விக்கெட்டுக்களையிழந்து 522 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நியூசிலாந்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.


அதன் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த சிறிலங்கா அணி 10 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சனத் ஜெயசூரியாவின் விக்கெட்டையிழந்தது. அவர் மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கிறிஸ் மாட்டினின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதனையடுத்து வெளிச்சம் போதாமையினால் ஆட்டம் நிறைவடைந்தது. மாவன் அத்தப்பத்துவும், மஹ்ரூப்பும் முறையே ஐந்து, மூன்று என்ற ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர். சிறிலங்கா சார்பில் சமிந்தவாஸ் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இது அவரது பத்தாவது ஐந்து விக்கெட் ஆகும்.



## இரண்டாம் சுற்றில் ஹெனின்

டபிள்யூடிஏ டென்னிஸ் போட்டியில் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார் ஜஸ்டின் ஹெனின். அமெரிக்காவின் கார்ல்ஸ்டன் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ டென்னிஸ் தொடர் நடக்கிறது. கடந்த திங்களன்று நடந்த முதல் சுற்றில் முன்னணி வீராங்கனையான பெல்ஜியம் நாட்டின் ஜஸ்டின் ஹெனின் 5-7, 6-4, 6-3 என்ற செட்டுக்களில் சேர்பிய வீராங்கனை ஜெலினா ஜோன் கோவிச்சை வீழ்த்தினார்.

## மே.தீவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்; தென்னாபிரிக்காவுக்கு எட்டு விக்கெட் வெற்றி



மேற்கிந்தியத்தீவுகளின் போட்ஒவ்ஸ்பெயினில் நடைபெற்ற தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் 143 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 146 ஓட்டங்களைப்பெற்றது.

போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 347 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லாறா 196 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.





பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சில் 398 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் 51 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை ஆடிய மேற்கிந்தியத்தீவு 194 ஓட்டங் களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.இரு இன்னிங்சிலும் மக்காயா நிற்றினி 132 ஓட்டங்களைக் கொடுத்து 13 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## தேர்வுக் குழுவிலிருந்து போடர் இராஜினாமா



அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அலன் போடர் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் தேர்வுக் குழுவிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

தான் இந்தப் பதவியில் தொடர்ந்து பணியாற்ற விருப்பம் கொண்டிருப்பினும் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டியிருப்பதால் வேறு சொந்தக் கடமைகளை செய்ய முடியாமல் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் வேறு நிறைய விடயங்களில் ஈடுபடலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போடர் 156 டெஸ்ட் போட்டிகளில் 11 ஆயிரத்து 174 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 93 போட்டிகளுக்குத் தலைமையேற்றுள்ளார்.

அவர் 1998ஆம் ஆண்டு தேர்வாளராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவரது கடைசித் தேர்வாக இங்கிலாந்துடனான ஆஸஸ் தொடருக்கான வீரர்களைத் தெரிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவரின் இடத்துக்கு யாரை நியமிப்பது என கிரிக்கெட் அவுஸ்திரேலியா ஆராய்ந்து வருகிறது. அத்துடன் டேவிட் பூன், அன்ரு கில்டிச், ட்ரவர் ஹோன்ஸ் ஆகியோர் பற்றி கவனம் எடுக்கப்படுகின்றது.

## தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் மாபெரும் பூப்பந்தாட்டப் போட்டி

புதுவருடத்தை சிறப்பிக்கும் வகையில் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் தமிழீழ விளையாட்டுத் துறையினால் நடாத்தப்படும் பூப்பந்தாட்டப் போட்டி நேற்று இரவு மின்னொளியில் ஆரம்பமானது.

ஒற்றையர், இரட்டையர் போட்டிகளாக நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் ஒற்றையர் பிரிவில் 23 போட்டிகளும், இரட்டையர் பிரிவில் 13 போட்டிகளும் நடை பெறுகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றுள்ளனர்.


தொடர்ந்து இன்று இரவு 9.00 மணிக்கு பெண்களுக்கான ஒற்றையர், இரட்டையர் பூப்பந்தாட்டப் போட்டி நடைபெறும் என தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தெரிவித்தார்.

மேற்படி போட்டிகளுக்கு நடுவர்களாக குமார், பரஞ்சோதி, பிஜசீலன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

## துணுக்காய் பிரதேச செயலர் விளையாட்டுப் போட்டி நிகழ்வு

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டு போட்டி நிகழ்வுகளின் இறுதியாட்ட உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்ட நிகழ்வுகள் யோகபுரம் மகாவித்தியால விளையாட்டு மைதானத்தில் கடந்த 11ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு துணுக்காய் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சசிதரசீலன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நடுவராக மாந்தை கிழக்குப் பிரதேச வில்ளயாட்டுத்துறை உத்தியோகத்தர் முகுந்தன் கடமையாற்றினார். இறுதி விளையாட்டின்பின் உதைபந்தாட்டப் போட்டியில் பூபாலினி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும்,வாணி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், பெண்களுக்கான வலைப்பந்தாட்ட பேட்டியில் முதலாம் இடத்தை வெளின்டன் விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தை ஐயங்கன்குளம் தமிழ்தென்றல் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன. (24)

## சிந்தனைக்கு



மகளிர் படைப்பிரிவின் தோற்றமும் வளர்ச்சியும் எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை, நான் பெருமிதத்துடன் கூற முடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-04-2005

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## சனாதிபதியின் கையில்...!

"நாட்டின் அரசியல் எதிர்காலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் கைகளிலேயே உள்ளது" என்ற பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் கூற்றுக்கள் மிகைப் படுத்தப்பட்டதொன்றல்ல. ஏனெனில் ஆட்சி அதிகாரமும், அரசாங்கமும் முறையே சனாதிபதி சந்திரிகாவிடமும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடமுமே உள்ளன.

எடுத்துக்காட்டாக போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கும் சக்தி கூட இவ்விரண்டு தரப்பிடமே உள்ளதெனக்கூறிவிடலாம். வேறுவிதமாகக் கூறுவதானால் சனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட தீர்மானங்களும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்மானங்களும் நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் சக்தி வாய்ந்தவையாகும். ஆகையினால் பிரதமர் மகிந்தராஜபக்ஷ கூறியது போன்று சனாதிபதியினதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் கைகளிலேயே நாட்டின் எதிர்காலமுள்ளது என்பது தவறில்லை.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எடுக்கும் தீர்மானங்கள் இன்றைய நிலையில் மிகவும் முக்கியத்துவம் பொருந்தியவையாகும். அதாவது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பவையாகும். ஆகையினால் பெரும் பொறுப்புடன் அவர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளவும் பணியாற்றுவதும் அவசியமானதாகும்.

ஆனால் சனாதிபதியோ அன்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ இன்றைய நிலையில்-ஏன் கடந்த காலத்தில் கூடத் திறம்பட்ட முறையில் செயற்பட்டதாக இல்லை. மாறாக நாடு அழிவுப்பாதையிலேயே இட்டுச்செல்லப்பட்டது.

இத்தகைய தொரு நிலைப்பாட்டுடனேயே தற்பொழுதும் சனாதிபதி சந்திரிகாவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் செயற்பட்டு வருகின்றன. அதாவது நாடு இன்று இருபெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. ஒன்று இனப்பிரச்சினை, இரண்டாவது சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவு. இவை இரண்டும் இன்று தீர்க்கப்படவேண்டிய இரண்டு முக்கிய பிரச்சினைகளாகும்.

இதில் இனப்பிரச்சினை நீண்டதும், சிக்கலானதும் ஆகும். ஆகையினால் இதற்கான தீர்வு என்பது சற்றுக்காலதாமதத்தின் பின்னரே எட்ட வாய்ப்புண்டு. ஆனால் இனப்பிரச்சினை காரணமாக, நிகழ்ந்த யுத்தத்தினால் அழிவுகளைச் சந்தித்த மக்களுக்கு உடனடியாகப் புனர்வாழ்வு அளிக்க வேண்டிய தேவையுள்ளது.

இதன் பொருட்டே விடுதலைப்புலிகள் இயக்கம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான நகல்திட்டம் ஒன்றை முன்வைத்ததோடு, பேச்சுவார்த்தைக்கும் தயார் என அறிவித்தது. ஆனால் சனாதிபதியோ அன்றி ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான சுதந்திரக்கட்சி கட்சியோ இதற்கு ஆதரவான முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை. இதனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் முடங்கிப் போயுள்ளன.

அடுத்தது சுனாமி அனர்த்தத்தில் ஏற்பட்ட பேரழிவில் இருந்து மக்களுக்கு மீள்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளாகும். சுனாமியின் தாக்கமானது திடீரென ஏற்பட்டதொன்று. ஆகையினால் இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வளிப்பதென்பது. சிக்கல் நிறைந்ததல்ல. நிவாரணப்பணிகள் ஒழுங்கமைக்கவும், சீர்படுத்தவும் உரிய ஏற்பாடுகள் அதாவது திறம்பட்ட முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டால் போதுமானது. இதற்குப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் தொடர்பான ஆலோசனை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அதற்கான ஒப்புதலை அரசாங்கம் இன்னமும் அளித்ததாக இல்லை.

அதாவது நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கத்தக்கதான இரண்டு பிரதான பிரச்சினைகளிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ ஆளும் கூட்டணியில் பிரதான கட்சியாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ முன்னேற்றகரமான தீர்மானம் எதனையும் கொண்டதாக இல்லை. மாறாக வெவ்வேறு பிரச்சினைகளுக்கு முதன்மை அளிப்பதிலேயே அவை அக்கறை கொண்டவையாகவுள்ளன.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து இன்று தலையாய பிரச்சினையாக இருப்பதும், அவர் கையில் எடுத்துக்கொண்டுள்ள பிரச்சினையாக இருப்பதும், தனது பதவிக்காலத்தை தக்க வைப்பது எவ்வாறு, என்பது குறித்து விடயமே. அதேபோன்று சுதந்திரக்கட்சி கையில் எடுத்துக்கொண்டுள்ள முக்கிய விடயம் ஜே.வி.பியுடனான உறவு குறித்த விவகாரமே.

இந்த வகையில் நாட்டின் எதிர்காலம் சனாதிபதியினதும், சுதந்திரக்கட்சியினதும் கைகளில் இருப்பினும் அவர்களின் நடவடிக்கைகள் நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை பயப்பதாக இல்லை. சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாகத் தொடர்வதும், சு.கட்சி ஆட்சியில் நீடிப்பதுமே அவர்களின் பிரச்சினையாகும். இந்நிலையில் நாட்டின் எதிர்காலம் எவ்வாறு ஒளிமயமானதாக இருக்கமுடியும்?

# அரசு திட்டங்களை உடன் சமர்ப்பிக்காவிடின் சிறிலங்காவிற்கான உதவிகள் கிடைக்காமல் போகும்!

### - ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சுனாமி நிவாரணத்திற்கான பொதுக் கட்டமைப்பு, சமாதான முயற்சி, பொருளாதாரக் கொள்கை என்பவை தொடர்பாக உடனடியாகத் திட்டங்களைச் சமர்ப்பிக்காவிடத்து இலங்கைக்கான நிதி உதவி கிடைக்காமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது. விரைவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கான மாநாடு நடைபெறவுள்ளதாகவும், இதேவேளை வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் தனது உறுதியான திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் உதவிகள் ஏதும் கிடைக்கப்போவதில்லையெனவும் அது வலியுறுத்திக்கூறியுள்ளது.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சி தலைமை அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரட்ணவே அரசிற்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், ஜே.வி.பி.சமாதான முயற்சி, பொதுக்கூட்டமைப்பு, பொருளாதாரக் கொள்கை ஆகிய மூன்று விடயங்களையும் எதிர்த்து வருகின்றது.

இந்த நிலையில் அரசாங்கத்தினால் உறுதியான திட்டத்தினை சமர்ப்பிக்க முடியாது. அவ்வாறு ஜே.வி.பியினரின் எதிர்ப்பினை மீறி அரசாங்கம் சமர்ப்பிக்குமேயானால் அரசாங்கம் கவிழும் நிலை ஏற்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர் மற்றும் சுனாமி நிவாரணத்திற்கான நிதியுதவி என்பவை இலங்கைக்குக் கிடைக்காது போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிதி உதவிகளை வழங்குவதற்காக உரிய திட்டத்தினை சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா அரசாங்கத்திடம் உதவி வழங்கும் நாடுகள் கோரியுள்ளன.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்திற்கு முன்னதாக அரசாங்கம் உறுதியான திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டுமென்று உதவி வழங்கும் நாடுகள் இறுதி எச்சரிக்கையை தற்போது விடுத்துள்ளன.

அரசு தவறும் பட்சத்தில் டோக்கியோ மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்ட நிதியுதவி மற்றும் சுனாமி நிவாரணத்திற்கு உறுதி அளிக்கப்பட்ட நிவாரண உதவிகள் என்பன கிடைக்காமல் போகும் நிலை ஏற்படுமெனவும் ஐ.தே.க. எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சு.க. மக்களுக்குத் தனியாக தெளிவுபடுத்தும்!

### - சனாதிபதியின் பணிப்பிற்கமைய நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமாதான நடவடிக்கை பற்றி தனியாக பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது..

சனாதிபதியின் பணிப்பிற்கிணங்க இதன் முதற்கட்ட பிரச்சாரக் கூட்டம் வரும் 23 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகசபை பற்றிய விளக்கமும், சமாதான நடவடிக்கை பற்றிய விளக்கமும் மக்கள் முன்வைக்கப்படும். இதற்காக சனாதிபதியால் செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவில் டிலான் பெரேரா மகிந்தானந்த அலுத்கமகே கே.ரி.பி. ஏக்கநாயக்க ஆகிய அமைச்சர்கள் அங்கம் வகிக்கின்றனர். இப்பிரச்சாரக் கூட்டங்கள் நாடு முழுவதும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல்வாதிகளின் தலையீடுகளால் அரச நிர்வாகம் சீர்குலைவு

### - கணக்காய்வாளர் திணைக்களம் விசனம்

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் அநாவசியமான தலையீடுகளால் இன்று அரச நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதென அரச கணக்காய்வாளர் திணைக்களம் விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான விடயத்தை சிறிலங்கா பாராளுமன்றத்தின் கவனத்திற்கும் அரச கணக்காய்வாளர் திணைக்களம் கொண்டு வந்துள்ளது.

அரசாங்கத்தின் சட்ட திட்டங்கள், சுற்று நிருபங்கள், அறிவித்தல்களை உதாசீனம் செய்து அநாவசியமாக அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்தில் அரசியல் வாதிகள் தலையிடுகின்றனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# சிறிலங்காவின் நடைமுறைச் சட்டங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை பரிசீலிக்க ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய குடிமக்கள் ஆணைக்குழு சிறிலங்கா நடைமுறைச் சட்டங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை குறித்து ஆராயவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் கல்விமான்கள், மாணவர்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கள் அறியப்படவுள்ளன.

சிறிலங்காவில் நடைமுறையில் உள் சட்டங்கள் நீதிமன்ற நடைமுறைகள் குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்கள் பெறப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நீதிமன்ற நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கான பரிந்துரைகளை இந்த ஆணைக்குழு மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு பிறிமா நிறுவனத்துடன் இணைந்து கோதுமைமாவை இறக்குமதி செய்ய முடிவு!

### தனியார் அனுமதிகள் அனைத்தும் ரத்து

கோதுமை மாவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய தனியாருக்கு வழங்கிய அனுமதியை ரத்துச்செய்யப்போவதாக சிறிலங்கா அரசுஅறிவித்துள்ளது.தரம்குறைந்த மாவை தனியார் துறையினர் இறக்குமதி செய்வதால் தனியார் துறையினருக்கு வழங்கிய அனுமதிகள் யாவற்றையும் ரத்துச் செய்யப்போவதாகவகைவாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாந்து புள்ளே தெரிவித்துள்ளார். அரசும், பிறிமா நிறுவனமும் இணைந்து மா இறக்குமதி செய்யப்போவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். தாம் குறைந்த மாவினால் உற்பத்திசெய்யும் உணவுப் பொருள்கள் யாவும்வெகுவிரைவில் பழுதடையும் நிலை ஏற்படுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# நண்டுகள் கொள்ளை

மன்னாரிலிருந்து கொழும்புக்கு நண்டுகளை ஏற்றிச் சென்ற கொள்கலன் வாகனமொன்று கொள்ளையிடப்பட்டுள்ளது.

மேற்படி வாகனம் சிலாபப் பகுதியில் வழிமறிக்கப்பட்டு வாகனத்துடன் நண்டுகளை கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்த நண்டுகளின் பெறுமதி பதின்மூன்று இலட்சம் ரூபாவாகும். இது குறித்து சிலாபம் பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

# சதொசவுக்குப் பதில் புதிய நிறுவனம்

(கொழும்பு)

சதொச நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்ட பின் தற்போது அதற்குப் பதிலாகப்புதிதாக நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரச தலைவர்கள் பிரதமர் காரியாலயத்தில் அவசர தீர்மானங்களை எடுத்துள்ளனர். இந்த நிறுவனம் முழுமையாக அரச கட்டுப்பாட்டில் இயங்குமென பிரதமர் தெரிவித்துள்ளார். எண்ணெய் விலைகள் அதிகரித்ததால் புதிதாக ஆரம்பிக்கும் நிறுவனத்தினால் மானிய விலைக்கு முச்சக்கர வண்டிகள், பாரவூர்திகள்,தனியார் வாகங்களுக்கு எண்ணெய் விநியோகம் செய்யப்படுமென பிரதமரின் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது வாடிக்கையாளர்கள்
நண்பர்கள் அனைவருக்கும்
சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



விநாயகா ட்ரேட் சென்ரர்

எங்களிடம் NATURAL
பிறவுண் கலர், அலுமினிய பார்கள்,
ஒட்டுப்பலகை, M.D.F வெள்ளை போட்,
சிப்போட், சிலிங்சீற்
வகை, தரைவிரிப்புக்கள்,
ரெச்சின், வெல்பெட் துணி, யன்னல்,
மேசைக்கண்ணாடி, பிளைவுட் கதவு,
பிளாஸ்டிக் கதவு, பிளாஸ்டிக்
கலர் கண்ணாடிகள், அனைத்து வகையான
பூட்டுக்கள், கைபிடிகள், ஹாட்வெயார்
பொருட்கள் மற்றும் அனைத்து வகையான
அலுமினிய பிற்றிங் வேலைகளும்
செய்து கொள்ள நாடுங்கள்.


விநாயகா
டிரேட் சென்ரர்
VINAYAGA TRADE CENTRE
No.102, First Floor, New Bus Stand Complex Vavuniya.
T.P:07123556
(சி-11769)



செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

எட்க்ரோ
கிரிவ்ஸ்
புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
MK-12/MK-20

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு
எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கிவரக்கூடிய சலுகைகள்
ஒரு வருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்ட
காலம் உழைக்கக்கூடியதும் அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய
வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்கவல்லது. எரிபொருளை
சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப்பிந்திய சிறந்த சேவை.
தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.



EDNA GROUP
எட்னா அப்ளயன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
160, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6
தொலைநகல்: 594558, 500909
தொடர்புகளுக்கு: மயூரா-0777 418821 இபுனு-0777 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஆர்க் என்ரப்பிறைசஸ்
(சி-11710)
150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2052



எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நகரங்களை இணைக்கும் பணியில்...



AMT TRANSPORT & CONSTRUCTION
Transport Contractors, Customs Clearing, Forwarding Agents & Civil Contractor
பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்தி, கோப்பாய், யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 5784
230,232, Wolfendhal Street, Colombo-13
T.P:011-2451716, 011-2451558
(சி-11711)



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நங்கையரின் மனம் விரும்பும் வடிவங்கள்
தரம் குன்றா தங்கநகைகள்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்.

கணேசா நகையகம்



123, பஜார் வீதி, வவுனியா. TP : 024-2222464


கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP - 021 222 5987

யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு, கொழும்பு- 11.
TP - 011-2336252
(சி-11770)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய
# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் 14-04-2005

## கற்பக விநாயகர் கருணைத் தேரோட்டம்




சங்கிராந்தியில் சான்னித்தியமாகி சங்கடங்களை விரட்டி சார்ந்த பக்தர்களின் சஞ்சலங்களை சரிந்தோட செய்யும் பெரும் கருணைக் கடல் வள்ளலாம் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகரின் இரதோற்சவ திருநாளாம் இன்று பார்த்திபனுக்கு தேர்ச்சாரதியாக பரந்தாமன் அன்று பாரதத்தில் துணை நின்றது போல பாரில் விளைந்த உயிர்களின் வீடு ஏற்றும் சாரதியாக முக்கண்ணன் மகன் முதல்வன், காரை மாநகரின் மண்ணில் மகிழ்வுடனே சஞ்சரிக்கின்றார் இன்று.

எம்பெருமானுக்கு தேர்திருவிழா என்றதும் மனம் ஆனந்தக்கூத்தாடுகிறதே ஏன்? தேர்த்திருவிழா என்பதில் என்ன விசேடமான மகத்துவம் உண்டு? எனச்சிந்தித்து தெளிந்து வழிபட்டால் அதன் பலமும் பலனும் கூடும் அல்லவா? அந்தவகையில் கற்பகத்தான் பொற்பாதங்கள் தேரேறும் திருநாளாம் இன்று, நாமும் தெளிந்து செல்வது சாலவும் சிறப்பானதன்றோ.

"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்பது பழமொழி. அரசனின் தொழில் தன் நாட்டு மக்களைக் காப்பது தெய்வத்தின் தொழில் தன்மீது பற்றுக் கொண்ட அனைத்து உயிர்களையும் காத்து அருள் புரிவது. அரசன் மக்களைக் காக்க சிம்மாசனம் ஏறுவான் பின்பு தேரேறி துயர்தீர்ப்பான் தேரில் அரசன் ஏறினால் அவனுக்கு மூன்று செயற்பாடு உண்டு என்பர். மக்கள் குறைகேட்டல், மக்கள் துயர்பார்த்தல், மக்கள் குறைதீர்த்தல் என்பனஅவையாகும். குறைகேட்டபின் உண்மையைப்பார்த்தபின் அரசன் அக்குறையை அழிப்பான். கருணைக்கடவுளும் அரசன் போல் தினமும் புறப்படுவர் அல்லர். வருடத்தில் ஒருமுறை அல்லது இருமுறை மக்களால் குரல் கொடுத்து அழைக்கப்படும் பொழுது சிம்மாசனம் ஏறிப்பின் தேரேறி குறைகளை அழிக்கின்றார் இதனால் இறைவன் நின்று பாவங்களைக் கொல்கின்றான் என்றும் அரசன் அன்றே பாவங்களை கொல்கின்றான் என்றும் கூறுவர்.

அரசனால் தீர்க்கும் பாவம் சாதாரணமானவை. ஆனால் இறைவனால் கொல்லப்படும் பாவம் என்றுமே துன்பம் தீண்டாத இன்பமயமான பேராணந்தப் பெருவாழ்விற்கு வித்தாக அமையக் கூடியது. எல்லாப்பாவங்களும் சுட்டெரிக்கப்பட்டால் மீண்டும் எம்மை அடையாது. இறைவனும் பாவங்களைச் சுட்டெரிக்கவே தோன்றுவது போல் அக்கினிச்சுவாலையின் வடிவமாக அமைக்கப்பட்ட தேரில் வலம் வருகின்றார். தேரில் சுற்றப்படும் சீலை அலங்காரங்கள் ஆகியவற்றின் நிறம் நெருப்பைச் சார்ந்த நிறங்களான சிவப்பு,வெள்ளை, மஞ்சள் ஆகிய வர்ணங்களில் அலங்கரிக்கப்படுவதன் நோக்கமும் அதுதான். அதனால் தான் தெரிந்தோ தெரியாமலோ தேர்த்திருவிழா பார்க்கின்றவர்களின் பாவங்கள், பிறவித்துன்பம் நாசமாகின்றது என்று புராணங்கள் பேசுகின்றன.

மேலும் தேர் என்ற சொல்லுக்கு தேர்ந்தெடுக்கப்படுதல் என்ற ஒரு பொருளும் உண்டு. இறைவனின் அன்புக்குத் தேர்வாகின்ற ஆண்மாக்களும் இந்தத் தேர் உற்சவ காலத்திலே தான். இதன் முகமாகத் தான். இறைவன் தம்மை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பொருளில் பிரதிட்டை, விரதம், அடிஅளித்தல், சிதறுதேங்காய் அடித்தல், காவடி எடுத்தல், சமூகசேவை புரிதல், கற்பூரச்சட்டி எடுத்தல், தீ மிதித்தல் எனப் பலவழிமுறைகளிலும் அன்பர்கள் தம் அன்பையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தி கோசமிட்டு கையேந்தி இறைவன் பால் நின்றனர். வேறு திருவிழா நாளுக்கு இல்லாத சிறப்பு இந்தத் தேர்த்திருவிழாவில் இதனால் ஏற்பட்டது. எனவே இறைவனின் பரீட்சையில் நாம் தேர்வாக அர்ப்பணிப்புடன் உணர்ந்து நம் அன்பை வெளிப்படுத்தினால் நிச்சயம் மோட்சம் என்கின்ற சித்தி இத்தினத்தில் நமக்குக் கிடைக்கும்.

ஒரு தோட்டத்தின் விதைப்புப் போன்றது கொடியேற்றம். இதனால் அது படைத்தல் திருவிழா எனப்பட்டது. விதைக்கப்பட்டதை பல நாள் பாதுகாப்பது போன்றது வாகனத்திருவிழாக்கள் அதனால் அது காத்தல் எனப்பட்டது. பயிர்களின் செழிப்பை குன்றவைக்கும் தீய களைகளைக்களைந்து எறிவது போன்றது தேர்த்திருவிழா. அதனால் அது அழித்தல் எனப்பட்டது. பயிர்களின் பலனாம் அறுவடை அடைவது போன்றது தீர்த்தத்திருவிழா அதனால் இது அருளல் எனப்பட்டது. எனவே நாளைய பலனைப் பெற நாம் இன்றே எம்மிடையே உள்ள களைகளை அழித்தொழிக்க தேர்த்திருவிழா எங்களுக்கு உணர்த்துகின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பார்கள். ஒருவரால் செய்யமுடியாத சாதனையை ஊரே ஒன்று கூடிச் செய்யமுடியும். ஒற்றுமையுடன் களைகளைக் களைய கற்பகத்தின் மீது நம்பிக்கை எனும்வடம் பிடித்து பல கோடி உயிர்கள் நம்மிடையே உள்ள பாவம் என்கின்ற களையை அறுக்க நேசம் கொண்டு அவன் திருவடி பணிந்து எமது புத்தாண்டால் புனிதர்களாவோமாக. கற்பக விநாயகரின் கருணை மகத்தானது.

**மேற்படி ஆலய நித்திய நைமித்திய மகோற்சவ குரு**

**பார்த்தீப வருட இன்றைய நன்நாளில் தேரேறும் கற்பக விநாயகரின் நல்லருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.**

**கணேசன் ஸ்ரோர்ஸ்**
இல:201, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-11712)


**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(மக்கள் மனம் கவர் மாளிகை)
(சி-11715)

**சிவனருட்செல்வன் அரிசி ஆலை**
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(சி-11716)

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
இல:50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-11713)

**கஜமுகன் ஹாட்வெயர்**
இல:147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ. பே:2222833
(சி-11714)

குகன் நிறுவனத்தின் சார்பில்
அனைவருக்கும் எமது தமிழ்ப்புதுவருட வாழ்த்துக்கள்!
1936இல் இருந்து சிறந்த சேவையில் தெளிவான
விரைவான புகைப்பட சேவையில்
அனுபவம் மிக்கவர்களான
**குகன் ஸ்ருடியோ கலர் லாப்**
**KUGAN STUDIO & COLOUR LAB**



Point - Pedro
T.P:021-2263218 பருத்தித்துறை.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இனிய
சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்.
அனைத்து
புடவை வகைகளையும்
மலிவு விலையில்
ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய
இடம்.



**பெற்றா பலஸ்**
**PETTAH PALACE**
கொறவப்பொத்தான வீதி, வவுனியா.
(சி-11767)

மக்கள் வங்கி

சிசு உதான

எதிர்காலம் எமது பிள்ளைகளுக்கே உரியது

மக்கள் வங்கியின் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

## எதிர்காலம் எமது பிள்ளைகளுக்கே சொந்தம்
## பிள்ளைகள் தானே பெற்றோருக்கு மிகப்பெரிய செல்வம்!



தரமான கல்வியைப்பெற்றுக்கொடுத்து. பிள்ளைகளுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுப்பதே ஒவ்வொரு பெற்றோரினதும் நோக்கமாகும்.

அதை நன்கு அறிந்து கொண்ட மக்கள் வங்கி எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்கும் நோக்கில் சிசு உதான சேமிப்புக்கணக்கை எமது பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.

**சிசு உதான கணக்கை ஆரம்பிப்பது எப்படி?**

ஏற்கனவே நாடெங்கும் உள்ள அநேகமான பாடசாலைகளில் சிசு உதான சேமிப்புப்பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு வரும் மக்கள் வங்கியின் சிசு உதான அதிகாரிகள் மூலம் பாடசாலையில் வைத்தே சிசு உதான கணக்கொன்றை ஆரம்பித்து சேமிப்பைத்தொடரலாம்.

எனவே அந்த சேமிப்புப்பிரிவுக்கு சென்று சிசு உதான கணக்கொன்றை ஆரம்பிக்கலாம். அதன்பின் இடைக்கிடை வசதிக்கேற்ப அதில் பணத்தை வைப்புச்செய்யலாம். பாடசாலையில் சிசு உதான சேமிப்புப்பிரிவு இல்லாவிடின் அருகில் உள்ள மக்கள் வங்கிக்குச்சென்று நீங்கள் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.

**சிசு உதான கணக்கை ஆரம்பிக்கத்தேவைப்படும் ஆகக்குறைந்த தொகை எவ்வளவு?**

ரூபா.100/= ஐ வைப்புச்செய்து சிசு உதான கணக்கை ஆரம்பிக்கலாம்.

**சிசு உதான கணக்கை ஆரம்பிப்பதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?**

அதிக நன்மைகள். சிசு உதான கணக்கில் சேமிப்புத்தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகளும் அதிக வட்டியும் வழங்கப்படும். இவற்றிற்கு மேலதிகமாக

*காப்புறுதிப்பாதுகாப்பும் புலமைப்பரிசில் கொடுப்பனவும்.
*முதல் முறையில் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப்பாடங்களிலும் அதி விசேட சித்தி பெறும் பிள்ளைகளுக்கு ரூபா.1000/= விசேட போனஸாக வழங்கப்படும்.
*முதல் முறையில் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப்பாடங்களிலும் அதி விசேட சித்தி பெறும் பிள்ளைகளுக்கு ரூபா.2000/= விசேட போனஸாக வழங்கப்படும்.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

மேலதிக விபரங்களுக்கு:
அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையை நாடுங்கள்.

பிராந்தியமுகாமையாளர்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்/வன்னி.

(சி-11717)



தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இலங்கைவங்கி சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.




## அதிக பணம் எங்களிடமிருந்து
## குறைந்த வட்டியும் எங்களிடமிருந்தே!



### இலங்கை வங்கி ரண்சுரெக்கும் அடகுச் சேவையின் சிறப்பு அம்சங்கள்

* ஒரு தங்கப்பவுனுக்கு ஆகக்கூடிய தொகை
* குறைந்த வட்டியில் உபசரிப்புடன் கூடிய உடனடிச்சேவை
* கொடுங்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை கொடுக்கல் வாங்கல்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்.
* அடகு வைக்கப்படும் பொருட்களுக்கு அதிகூடிய பாதுகாப்பு
* நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள்.ஏற்றுக்கொள்ளத்தக்க தரமதிப்பீடு.தங்க ஆபரணங்களின் தரத்தை தவறின்றி பரீட்சித்தலும். மதிப்பிடுதலும்
* கணனி மயப்படுத்தப்பட்ட கிளைகளில் பகுதி பகுதியாக பணத்தை மீளச்செலுத்துவதற்கான வாய்ப்பு
* தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் போது. சேமிப்புக்கணக்கு ஒன்றை ஆரம்பிக்கவும் பணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்கொண்டு அடைவை மீட்டுக்கொள்வதற்குமான வாய்ப்பு
* அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப்பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
* தொடர்ந்தும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வங்கிக்கணக்கை நடைமுறைப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம்.
* வியாபார நடவடிக்கைகளுக்காக மேலதிகப்பற்று வசதிகளை பெற்றுக்கொள்ளத்தக்க வாய்ப்பு.

இலங்கை வங்கி
ரண் சுரெக்கும்
கடன்சேவை

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

(சி-11718)